24-2

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

சமிவனக்ஷேத்திரமென்னுங்

கோயிலூர்ச் சிவஸ்தலத்தில்

எழுந்தருளியிருந்த

# ஸ்ரீ@ஸ்ரீ. முத்துராமலிங்கசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

கணபதிவணக்கம்முதல் சொரூபாநுசந்தானமீறாகிய

# சுவாநுபவத்திருவாக்கு.

---

இஃது,

ஷை சமிவனக்ஷேத்திரமென்னுங்

கோயிலூர்

## அ. இராமசாமிச்சுவாமி

அவர்களால் பிழையறப்பரிசோதித்து

பலருமடைய வேண்டுகோளின்படி

சென்னை:

வே. நா. ஜுபிலி அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

---

இதன் விலை அணா-அ.

---

சர்வதாரி ஹூ ஆடிமீ.

1888.

24 - 2

கணபதி துணை.

சிவமயம்.

# சிறப்புப்பாயிரம்.

சமிவனக்ஷேத்திரமென்னுங்

கோயிலூர்

## அடியார்குழாத்துளொருவரியற்றியது.

(நேரிசையாசிரியப்பா.)

பொன்னார் கமலப் பூவினி துறையு
மன்னுந் திசைமுகன் வணங்தவான் புவியின்
மந்தா நிலந்தவழ் மலயமா மலைமேற்
சிந்தா மணியாய்த் திகழும் பெருந்தவக்
குறுமுனி மலர்வாய்க் குமுதநின் ஹெழுகு
மறுவறு நறவாம் வண்டமிழ்ப் பாண்டி
வளநா டதனின் மாதவ முனிவரு
முளநா டரியசத் துதிதவா னந்தச்
சுயம்புவா யொளிருஞ் சோமசுந் தரனு
நயம்பரா பரைச்சே னயனநா யகியுஞ்
சுயஞ்சித் துருவாஞ் சுடர்வே லிறையும்
வயம்பெறு முலகின் மன்னுயிர் தழைப்பப்
பொன்மணி மௌலி புனைந்தமன் னவராய்
நன்முறைச் செங்கோ னடாத்திய வதனுற்
சதமகன் பூமகன் சனார்த்தன னுலகின்
முதன்மைபாங் கைலையின் மூலநற் சிவனே

முறைசெலுத் தியவோர் முறைமையாற் கைலையி
னறமிகச் சிறந்த தந்நா டேயாம்
பல்வள நிறைந்தவப் பாண்டிநன் னாட்டின்
மல்குஞா னத்தவர் மன்னுநற் றலமதாய்ப்
பராவுத லுறுஞ்சிவன் பன்னிய காந்த
புராணயுக் தமதாம் புராதனஸ் தலமாய்த்
தாரணி சோமசுந் தரபாண் டியனருள்
விரவுக் கிரன்சுதன் வீரபாண் டியனு
விராசகட் கேச னெனப்பெயர் புனைந்த
பராபர னேடும் பைம்பொனூர் வணிக
னேரிழை யாற்றிரு நெல்லையென் பெயர்புனை
வார்முலை யம்பிகை மன்னிவீற் றுறுவதாய்ச்
சிமிமணிக் கோபுரஞ் செம்பொன்மா ளிகைசூழ்
சமிவன மென்னத் தயங்குக்ஷேத் திரமாய்ப்
பணவணிப் பரனே பல்விளை யாடல்செய்
மணநிறை கடம்புசூழ் மதுரைமா நகர்க்குக்
குணபான் மூன்றரை கொண்டயோ சனைக்கு
மிணரார் குருந்தடி யினிலிறை வாதவூர்த்
திடமா தவர்க்கரு ளிருப்பெருந் துறைக்குக்
குடபா லொன்றரை கொண்டயோ சனைக்கு
நாப்பணி லமக ணைகமுகத் திலகமென்
மாப்பண் புறுவதாய் மலிபுனி தமதாய்க்
குலவுநற் பதியாங் கோயிலூ ரதனின்
மலர்மணம் போல மன்னிவீற் றிருக்கு

மாரணம் பல்கலை யாகம முரைப்பருங்
காரணங் கற்பனை கடந்தொளிர் பரமா
யுருவரு வொன்று முருதநின் மலமாய்ப்
பெருவெளி யாகிப் பிறங்குசித் துருவாய்
நித்திய நிர்க்குண நிராமய நிறைவாய்ச்
சத்திய சிற்சுக தாணுவாய் நினைவென்
களங்கமற் றொளிருங் கதிரொளி வடிவா
யளந்தறி தற்கொணு வகோசரப் பொருளாய்
முப்பதங் கடந்த முதற்பிர மமதாய்ச்
செப்புத லுறவொளிர் சிவமே யருளா
லூனமி லாலியா யுற்றிடு நீர்போன்
மாநுட வடிவாய் வந்தவ தரித்த
சீர்முத்து ராம லிங்கமெய்த் தேசிகன்
கார்முகில் போலக் கருணையே பொழியு
ஞானமே யுருவா நற்றிரு நெல்லை
யானவம் பிகையி னருண்மிகப் பெற்றுத்
தனதுரு வானசிற் சாகர மதனிற்
றினமுமே குளித்துந் திருந்திழை மிகவுஞ்
சோரநா யகன்மேற் றேய்மன மிருத்தி
வாரநா யகற்கு வரிசையாய் நடக்குஞ்
செய்கைபோற் பூரண சின்மயப் பொருளில்
வைகுறத் திருவுளம் வைத்துல குய்வான்
கொற்றவா ளீசனெங் கோமா னருண்மிகப்
பெற்றவர் புகழப் பிறங்குபொற் குவடிவட்

கொணர்ந்துவைத் ததினிலைக் கோபுரம் பைம்பரி
புணர்ந்ததே ரிரவி போலொளிர் விமானந்
திரண்மணித் தூணிறுத் தியபல மண்டபந்
தாளவெண் சங்கந் தவழவா லன்னப்
புட்பொலி வனசப் பொய்கைவண் பரிமளங்
கட்பொலி மலர்ப்பூங் காவிருங் கிளிபயி
றென்னஞ் சோலைசூழ் திருவீ திகணிலை
மன்னுஞ் சுருதியின் வான்பொரு ளுணர்ந்தோ
ரிதயதா மரைபுரை யேர்தரு மிரதம்
புதையநீண் முகிலுலாம் புரிசையோ டிராப்பகல்
வந்தவர்க் கெல்லாம் வானு ரமுதங்
கந்தமில் வேம்பாக் கைப்புறு மாறிங்
கன்னதா னம்புரி யறச்சாலை கண்மறை
சொன்னவா தமையுணர் தொன்முனிக் குழாங்கண்
மன்னுமா றணிமிகு மடாலயம் பிறவு
மின்னவா மெனமனோ ரியம்புதற் கரிதா
வகைவகை செம்பொன் மாரிபோல் வழங்கி
மிகநவ நவமா விளங்குறப் புரிந்து
மிச்சமி வனத்தி லியற்றிய முறைபோன்
முச்சகம் புகழ்தர மொழிதலங் களினுங்
கோபுர மாதி குறைவற வியற்றியு
மாபுரம் பூதன மாதர்சே யோடுங்
கூடுறு மவர்போற் குலாவியு மகத்திற்
பாடுறு மாசைப் பற்றிலா தவராய்

மேனியிற் றரித்த வெண்கலை போலத்
தானியல் வழாத தனிநெஞ் சினரா
யநித்தியஞ் செல்வமென் றறிந்துகற் பகம்போற்
றனிப்பெருங் கொடையராய்ச் சாதன நிறைந்த
சித்தரா யில்லறஞ் சேர்ந்தினி திருக்கும்
பத்தரா மளப்பரும் பரமசி லர்க்குந்
தனிவளர் பரமே சத்திய மற்றவை
யினிதறு மநித்திய மென்றுணர் விவேகமு
மிகநகர் ஞாளிகால் வெண்சோ றதனி
லிகபர போகத் திச்சையில் விராகமுஞ்
சமதம முதலாஞ் சட்குணச் செல்வமு
முமலமி நீவிர மோக்ஷா பேக்ஷையும்
பூரண மாகப் பொருந்தியித் தேக
மாரண மாமுன் மறைப்பொரு ளுணர்வா
னுதனந் துன்புக் காமட வாரு
மாதனக் குவையு மழலைவாய் மகவுந்
தடையெனப் பட்டினத் தார்போற் றுறந்து
கடைதொறு மேற்றுண் கரபாத் திரனுய்த்
திகம்பரி யாகித் தில்லையில் வைகுஞ்
சகம்புக ழருணு சலசி ஷன்முதற்
றுறவுறு மெண்ணிலாத் தொண்டர்க டமக்குந்
திறமிகு மறைகளுட் சிறந்துறுஞ் சாம
வேதவங் கத்தில் விளங்குதத் துவமசிப்
போதமா வாக்கியம் புகலுறு மிலக்கியச்

சுத்தசிற் சொரூப சுவாநுபூ தியினைக்
கைத்தல மணிபோற் கணிப்பிலத் துவிதச்
சுருதியுத் திகளாற் றேமற வுணர்த்திப்
பெருகுதுன் பமிலப் பிரதிபந்த மாகச்
சாட்சாத் கார சகசாநு போகங்
காட்சிய தாகக் கருத்துற விளக்கியுந்
தற்கொடை வழங்குந் தன்மைபோ லெவர்க்கும்
பொற்கொடை பொழியும் பொருவிலா வள்ளலாய்க்
கருவினை யுயிர்கள் கழற்றிட வனந்தந்
திருவிளை யாடல் செய்தது மன்றி
யுற்பவ மினியுறு முயிர்களுக் கிரங்கி
யற்புத மாமுளத் தருண்மிகச் சுரந்து
கடனிகர் பிறவிக் கரையேற் றிடனங்
கடனென நினைந்து கவிகளிற் சிறந்த
வெண்பாக் கலித்துறை விருத்த முதலாப்
பண்பா வியலுறப் பலபா வினங்களாற்
றெய்வ வணக்கமுந் தெய்வநிச் சயமு
மைவறு முத்தி நன்னிச் சயமு
மஞ்சுறு நெஞ்சிற் கறிவுறுத் ததலு
மஞ்சுகப் பத்து மலமரு நெஞ்சோ
டிரங்கலு மருளிறை யிணையடி வணக்கமும்
வரம்பெறு சொரூப வணக்கமு மிவைமுதற்
பொருவார் நாமம் புனைந்து
திருவாய் மலர்ந்தருள் செய்தனன் மாதோ.

உ

கணபதி துணை.

# குருபரம்பரை வணக்கம்.

சமிவனக்ஷேத்திரமென்னுங்

கோயிலூர்

## அடியார்குழாத்துளொருவரியற்றியது.

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.)

பரமாக வொளிர்சச்சி தானந்த மாம்விண்டு
பங்கயன்வசிட்டர்சத்தி
பராசமா முனிமகா வியாசர்சீர் சுகர்கௌட
பாதர்கோ விந்தயோகி
யருளுருவ மாஞ்சங்க ராசாரி யாமிறைக
ளமர்பத்ம பாதருயரத்
தாமலகர் தோடகா சிரியர்வார்த் திகர்வித்
தியாரண்ய ராகுமுரவோ
ரிருளுருவ மற்றவவர் மரபதனில் வந்தசுப்
பிரமணிய தேவனயின
வீசனழ கப்பவா ரியன்வீர பத்திரகுரு
வின்பமுத் தையவடிக
டெருளுருவ மாமுகந் தையனன் மைகளிலாத்
தியனேன் றனையுமாண்ட
சீர்முத்து ராமலிங் கேசதே சிகனிவர்க
டிகழ்பத மிறைஞ்சுவோமே.

# சூசீ பத்திரம்.


| நெம்பர். | | பக்கம். |
|---|---|---|
| க. | கணபதிவணக்கம். | க |
| உ. | சுப்பிரமணியர்வணக்கம். | உ |
| ௩. | திருப்பெருந்துறை. | உ |
| ௪. | கொற்றவாளீசர்வணக்கம். | ௩ |
| ௫. | திருநெல்லையம்மைவணக்கம். | ௩ |
| ௬. | பஞ்சாக்கரநாயகிவணக்கம். | க௬ |
| எ. | கொப்புடையாள்வணக்கம். | க௬ |
| அ. | விஷ்ணுவணக்கம். | உ0 |
| கூ. | போற்றிசங்கீர்த்தனம். | ௩உ |
| க0. | சொரூபவணக்கம். | ௩எ |
| கக. | அருளிறைவணக்கம். | ௩கூ |
| கஉ. | குருவணக்கம். | ௫க |
| க௩. | முத்திநிச்சயம். | ௫அ |
| க௪. | தெய்வநிச்சயம். | ௫கூ |
| க௫. | மனதிற்கறிவுறுத்தல். | ௬0 |
| க௬. | பொதுவாகக்கூறியது. | ௫க |
| கஎ. | புத்திக்கறிவுறுத்தற்கண்ணி. | ௬௪ |
| கஅ. | நெஞ்சோடிரங்கல். | ௬௬ |
| ககூ. | தெய்வமேயென்னுங்கண்ணி. | எ௩ |
| உ0. | கிளிப்பத்து. | எ௫ |
| உக. | சந்தவிருத்தம். | எஎ |
| உஉ. | சுவாநுபவத்திருவாக்கியங்கள். | எஅ |
| உ௩. | சொரூபாநுசந்தானநாமங்கள். | அஎ |

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# சுவாநுபவத்திருவாக்கு.

KOVILOOR ... MADDALAYAM.
Acc No: 314
R65;

## கணபதிவணக்கம்.

(நேரிசைவெண்பா.)

தோலாநநமுந்துணைப்பதமுமைங்கரமு
நாலாம்புயமருப்புநாடியே—மேலோர்கள்
கள்ளமறப்போற்றுங்கணபதியைநன்மனமே
யுள்ளநிலையுறைக்கவுன்னு. (க)

(நேரிசைக்கட்டளைக்கலித்துறை.)

சத்தேயென்சித்தத்தொளியாய்விளங்குஞ்சதாசுகமே
பத்தேபிறந்துபிறந்தேயிந்நாள்வரைப்பட்டதுன்பக்
கொத்தேயகற்றுங்குருவேபிறக்குங்குணகுணிக்கும்
வித்தேகழனிச்சிதம்பரமென்னும்விநாயகனே. (உ)

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.)

முற்பவத்திலியான்புரிந்ததீவினைகண்முழுதகற்று
முகத்தினனை
யற்பசுகத்தெனையழுத்தாவைங்கரனைப்பிறப்பவமு
மகற்றுங்கோவைச்

சொற்பழுதுபுரியாதவணிகர்குலந்தினம்பணியுந்
துணைத்தாளானைக்
கற்பகத்தின்மிடியகற்றுங்கற்பகமாநாயகனைக்
கருத்தில்வைப்பாம். (ரு)

---

## சுப்பிரமணியர் வணக்கம்.

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.)

பையாடரவப்பணிபுனையும்
பரமன்றனதுதிருச்செவியிற்
கையார்நெல்லிக்கனியெனவே
ககனுககனமிலதான
மெய்யாம்பிரமமிதுவென்று
விளம்பற்குரியவேலோனே
பொய்யாமொழியரிடத்துறைவாய்
போற்றிபோற்றிமிகப்போற்றி. (க)

### திருப்பெருந்துறை.

தொந்தமுங்கடந்ததூயோர்துதித்திடற்குரியபாத
மந்தமுநடுவுமின்றியமர்ந்திடுமெம்பொற்பாதஞ்
சந்ததஞ்சுகசிற்சத்தாய்ச்சதோதிதமானபாதஞ் [தம்.
சிந்தனைப்படியேதோன்றுந்திருப்பெருந்துறையான்பா

---

## கொற்றவாளீசர் வணக்கம்.

(நேரிசை வெண்பா.)

கருக்குழியில்வீழ்ந்துகசடுருறவாகிப் [ந்
பெருக்கமாம்பொய்ப் பொருளைப்பேணு—மருக்கமழு
தென்கழனியூரிற்சிறந்தகொற்றவாளீசர்
பொன்கமலத்தாளிணையேபோற்று. (க)

(எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.)

சுவருறையுமோவியங்கள்சுவரேயென்றல்
சுபாவமதிபோற்பரத்திற்றோன்றுநின்ற
பவமுதலாஞ்சங்கற்பவிகற்பமெல்லாம்
பரவடிவாய்க்கண்டுபரவடிவமான
தவருறையுங்கழனிநகர்க்கொற்றநாதன்
றனதருளாற்பேதமதிநாயினேனுக்
கிவனவனானதுவென்னும்பேதமின்றி
யெவ்வுருவுஞ்சின்மயமாவிருந்தவாறே. (உ)

கொற்றவாளீசர்வணக்க முற்றிற்று.

---

உபாசனாமூர்த்தியாகிய

## திருநெல்லையம்மை வணக்கம்.

வெண்பா.

அருவாயுருவாயருவுருவாய்மேலாந்
திருநெல்லையம்மையுருச்செப்ப—வருநாம

மாரணங்களோதவரியபராசத்திபெற்ற
வாரணமேதந்தாள்வரம். (க)

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.)

ஆறுறகன்றபரசிவமாயறிவாயழிவில்சுகவடிவாய்
வீறுர்பரிபூரணவுருவாய்வெளியாய்நிறைந்தவிநாயகனை
நாறுயிரக்கால்வணங்கிடுவோநுவலற்கரியபூரணியை
யாறுவிழிகண்ணீரொழுகவகத்தேதுதிக்கவருளென்றே.

---

(எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.)

ஓராறுசமயருளத்துணராய்போற்றி
யுணர்விலியேனுணர்வுதனக்குணர்வேபோற்றி
காராருமிடற்றோனுமயனுமாலுங்
காண்பரியவொளிபோற்றிகரியேபோற்றி
தாராருங்குலிசன்முதற்றேவரெல்லாந்
தாவரியபாஞ்சுடரேதாயேபோற்றி
சீராருங்கழனியில்வாழ்சிவையேபோற்றி
திருநெல்லைநாயகியேபோற்றிபோற்றி. (க)

(எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.)

அருளொடுபரையாய்ச்சிவமயமாகு
மம்மையேயெனதகத்திருந்து
தெருளொடுமருளுந்தியக்கறத்தெளித்த
தெய்வமேயன்பிலேனுனது
திருவடிநிழலிற்றிரிபுடிமறந்து
திரமொடுஞ்சேருநாளுளதோ

விருளறவிளங்குங்கழனியம்பதிவா
 ழேகமேதிருநெல்லையம்மே. (உ)
கண்டதேதிரமாக்கவர்ந்திடுங்கருத்தைக்
 கழலிணைநிழலிலேயிருத்திக்
கொண்டிடவெனக்கோர்திரமிலைகவரா
 திருக்கவுமருளதுகொடுப்பாய்
தண்டறவிளங்குஞ்சச்சிதானந்தத்
 தையலேசகத்துளோர்களுமே
லண்டருமிறைஞ்சுங்கழனியம்பதிவா
 ழம்மையேதிருநெல்லையம்மே. (ங)
வேண்டுவதொழிந்தும்வினையிருள்கடிந்தும்
 விழுப்பொருளிதுவெனக்கண்டு
மீண்டுறுநாமவுருவெலாஞ்சிவமா
 விதயத்திலுணர்ந்திவைமறந்துங்
காண்டருமினதுதிருவடிகதியாக்
 கலந்தனரடியர்யானின்ன
மீண்டிருந்தங்தோவிடருறலழகோ
 வென்னையாடிருநெல்லையம்மே. (ச)

(எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.)

சகலமெனுந்தொந்தமெலாஞ்சிவத்திலுண்டாய்த்
 தனக்கென்னவடிவின்றித்தானுண்டான
சுகவடிவேவடிவாகவிருந்தத்தொந்தஞ்
 சுகரூபமாதலநுபவமாக்கண்டு

மகமுடலென்றனுதினமுநாடிநாடி
யகமிதமென்றனவரதநைந்துநைந்து
மிகமிருந்தேமனதுமிகவாடகல்ண்டு
மின்னமிரங்காதிருத்தலென்னேயம்மே. (ரு)

ஓராகந்தனையசைக்குமாவேசத்தை
யொருகர்த்தாவுண்டென்றுதுலகிற்சொல்லும்
பேராதசோதிடத்தைக்காலமென்னுப்
பித்தாகும்வயித்தியத்தைப்பிறங்குஞ்சித்தை
யோராதுசடங்களையுந்தெய்வமென்றே
யுணர்ந்திடுமிம்மார்க்கமெலாமுணர்வாக்காணுஞ்
சீராகுந்துணிவுதனையருள்வாய்தெய்வத்
திருநெல்லைநாயகியேயம்மேயம்மே. (சா)

(கொச்சகக்கலிப்பா.)

சும்மாவிருந்தறியேன்சுகமிதுவாமெனத்தொடரே
னிம்மாநிலத்துறுகாண்பனவிவையேசுகமென்னு
மிம்மாமயறீரும்படியேயைமுகம்பாரா
யம்மாவறிவுருவேதிருநெல்லையகமிதமே. (எ)

பேயாயினுந்தருவிற்கணநிலைபெற்றிடும்பேயி
னேயாதுழறமியேன்மனதொன்றினிலையின்றி
நோயாலயதனுவாயனுதினநைவதுநோக்கா
யாயேயரும்பொருளேதிருநெல்லையகமிதமே. (அ)

ஏகாவிருளகமாயிருந்ததனுவிதமகிதத்
தாகாதிகளாலேதினமறவுந்துயருற்றே
னேகோவினமுனைநானடைந்துய்யும்வகையுளதோ
வாகாவவைபாகுந்திருநெல்லையகமிதமே. (கூ)

(அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.)

வந்தேபுவியின்மதியவித்தை
வசமாய்க்காயவசமாக
வந்தேவருத்துஞ்சுகாசுகத்தை
மாய்க்கும்வழியேதெனத்தேடி
வந்தேனுனதுதிருநெல்லை
மகத்தாம்பதிவந்துன்னருளால்
வந்தேன்வந்தேன்பரிபூர்ண
வனசமலர்த்தாடானுக. (க0)

வேறு.

அறிவறியாமைகளிரண்டுமெறிபவனேயகமிதமு
மாகியெங்குஞ்
செறியொளியாயிருந்தகிலசிருஷ்டிதிதிசங்காரச்
செயலுள்ளானைப்
பிறிவறியாவடியருளம்பிறங்குமிரும்பூரணியைப்
பேதாபேதக்
குறியிறந்தநிலையானைக்குணக்கடலையருட்குன்றைக்
குறித்துவாழ்வாம். (கக)

ஆசையெனும்விடமகற்றுமருமருந்தையம்பரத்துக்
கடங்காதந்த
வாசகனுமம்பரத்தையணுவினுக்குமணுவாகி
யனந்தமாகுந்

தேசுருவவடிவாளைச்சித்தமுதலாறறியாத்
திறத்தினளைக்
கோசமெனுமைம்பூதக்குரம்பையுறைந்துறையாளைக்
குறித்துவாழ்வாம். (கஉ)

படியளந்தமாலயனுமரனுமெனதியானென்னும்
பாவத்தாலே
மடியவதுவின்றியனவரதமொருநிலையாகும்
வடிவத்தாளை
முடிவறியாப்பெரும்பாழையகமிதமும்விளக்கியெனை
முடித்திட்டாளைக்
கொடியமனவேட்கையறவருமரியபூரணியைக்
குறித்துவாழ்வாம். (கங)

தீங்கிடர்களில்லாளைச்சிதம்பரமாம்வடிவாளைச்
சிந்தையாதி
யோங்கிருமூன்றுளையுன்னரியவடிவாளை
யுணர்விலேனைத்
தாங்குதிருவுளத்தாளைச்சந்ததந்தன்மயத்தாளைத்
தாமமூன்று
நீங்காதுவிளக்குவளைநெடுங்கழனிப்பதியாளை
நினைத்தல்செய்வாம். (கச)

அல்லலெனும்பிணியகற்றுமருமருந்தையெனதகத்து
ளமர்ந்ததாயைச்
சொல்லரியபாஞ்சுடரையகம்புறமுஞ்சுகமளிக்குந்
துரியவாழ்வைப்

பல்லுருவும்படைப்பாளைப்படைத்தவையாயிருப்பா
படையாதாளைச் [ளைப்
செல்லாதவிருளகற்றுந்திருநெல்லைநாயகியைச்
சிந்தைசேர்ப்பாம். (கரு)

(எண்சீர் விருத்தம்.)

நானவனீததுவெனலுமாயினளை
நாடரியவிவற்றகண்டமாய்நின்றளை
யானசகம்வரநிமித்தமாயினளை
யதுவொடுபொதானமெனவாயினளை
யினமனமில்விதயத்தெய்துவாளை
யினருளத்திருந்துமவர்க்கெய்தாதாளைத்
தினமறச்சேடமதாந்திருக்காவாளைத்
திருநெல்லைநாயகியைச்சிந்தைசெய்வாம். (கசு)

வேறு.

வானுடர்மணம்பொருந்தும்வாழ்வுநினையாதே
மண்ணுடர்பதியடையும்வாழ்க்கைநினையாதே
நானுனென்றில்வாழ்வினண்ணியுழலாதே
நாலிரண்டுசமயநெறிநாடியலையாதே
யானுமத்துவிதநிலைமைமறவாதே
யகம்புறமுமோருருவையன்றியுணராதே
தேனுடுங்காவின்மலர்த்தேனுறுபாயுந்
தென்கழனித்திருநெல்லைமின்பாதநாடே. (கஎ)

இன்னலுறுமுடலிருக்கவெண்ணுமெணம்போது
மிருநான்குசித்திகளிலிச்சைவைத்தல்போது

நன்னயமாஞ்சோதிடத்திஞட்டமினிப்போது
நல்லிரும்புபொன்ஞக்குநசையதுவும்போதும்
பின்னமுறும்வைத்தியத்தைப்பெறுமாசைபோதும்
பேதமுறுமிவைமுதலாம்பிராந்தியினைவிட்டுத்
தென்னனுக்குமலையனுக்குஞ்செல்வியெனலாகுந்
தென்கழனித்திருநெல்லைமின்பாதநாடே. (௧அ)

பார்க்கவொண்ணுவல்குறளைப்படமெனலும்போதும்
பகாவொண்ணுவருவினையாம்பையெனல்போது
மார்க்கவருமிருகரத்தைக்காந்தளெனல்போது
மக்கிசையுங்கால்கடமைவராலெனலும்போதும்
பார்க்குணிதந்தேய்பதத்தைப்பதுமமெனல்போதும்
பலநாளும்பெண்ணுலேபட்டதுயர்போதுந்
தீர்க்கரியவிவ்வாந்தைதீரும்வழியாகத்
தென்கழனித்திருநெல்லைமின்பாதநாடே. (௧௯)

(நேரசைக்கட்டளைக்கலித்துறை.)

சிராவிருக்கும்பரமானவின்பச்சிறப்படைய
நாராவிருக்கவரவாக்குறித்துநலிவதுபோல்
வாராதிருக்கவுருநாமநாடிவருநலிவு
பாராதிருக்கவாந்தாதிருநெல்லைப்பைங்கிளியே. ()

திண்டாதிருக்குஞ்சவம்போலிருக்குமித்தேகத்திலே
யாண்டாண்டிருந்துமழிந்தோமதுதிண்ணமாகையினுன்
மாண்டேசனித்ததுவாகாமலுன்னடிவைத்ததனை
வேண்டாதிருக்கவாந்தாதிருநெல்லைமெல்லியலே. ()

(நிரையசைக்கட்டளைக்கலித்துறை.)

விடந்தாங்குகண்டத்தர்மெய்யினிற்பாதிவிடாமலுறைந்
தடங்காதழகுருவானவளேயடியேனுமிந்தச்
சடந்தான்சுமந்துஞ்சலியாமனின்பொற்சரணின்மன
மடங்காதரந்தையுற்றேனபிராமிபடைக்கலமே. (உஉ)

(நேரிசைவெண்பா.)

உன்னுருவிலிவ்வுலகமுண்டாயிருந்தொடுங்க
முன்னும்பினுமிருந்தமூலமே—பின்னமற
வெவ்வுலகுந்தானுயிருந்தமௌனத்தலைவி
தவ்வுமனந்திரவரந்தா. (உங)

இந்தவுடற்சுமையையேன்சுமந்துநொந்தலைந்தேன்
பந்தங்கடந்தபராபரையே—சுந்தரியே
வாங்குதற்குநீயொருத்திவல்லாளேவந்தசுமை
தாங்குவதுமில்லைமெய்தந்தால். (உச)

சித்தமிரங்கிலையோசீர்நெல்லைநாயகியே
நித்தந்திருவடியைநீங்கினனோ—சத்தமுதற்
பஞ்சவிடயப்பழம்பகையைத்தீர்ப்பதென்றோ
துஞ்சுமுடறீர்வதென்றோசொல். (உரு)

இன்னங்கிரகப்பிரவேசமெய்தாமன்
முன்னம்புகுந்தபுரமேமுடிய—வன்னமே
யன்னமளிப்பாயதுவின்றேற்சூழ்காடி
யென்னத்தாற்பேதமெனக்கு. (உசா)

தொன்றுவருமாயாதுவந்துவமாஞ்சொப்பனம்விட்
டென்றுதொலையுமெனக்கென்றுயே—யன்றுவரை
நஞ்சுண்டோன்போலிருந்துநான்மெலிந்துவாடுதலிற்
றுஞ்சித்தொலைதல்சுகம். (உஎ)

ஆகாதவிவ்வுடலுக்காருதவியம்மம்மே
போகாததுக்கம்பொருந்தியிடி—லோகோகோ
வுன்னைநினைத்தறிண்ணமுன்னருளாலிவ்வுடம்பு
பின்னப்படுவதென்றேபேசு. (உஅ)

சுற்றத்தாரின்னந்தொலைந்தானிலையெனவே
பற்றற்றேனைந்திருத்தல்பண்பாமோ—கொற்றனுடல்
பாதிபரித்திருக்கும்பண்ணவிபேயுன்னையடைந்
தீதிருக்கஞாயமிலை. (உகூ)

இருப்பதுபோலேகரையுமிவ்வுடம்போடென்று
மிருக்கச்சகிக்கவிலையென்று—யுருத்தெரியா
திவ்வுடலினியிருந்ததின்றறிந்தேனின்னமெனக்
கிவ்வுடலாலெப்பயனுமில். (௩0)

தன்னைமறந்துன்மத்தன்றானடிக்கவந்ததுபோ
லென்னைமறந்தித்தேகமெய்தியதே—யின்னமிதாய்ப்
போவதழகோவுனதுபொன்னடிக்கேயாளாக
வாவதழகோவறை. (௩க)

இராகத்துவேஷமுடன்யானுக்கையோடிருந்து
மோகப்பிசாசாய்முடிவேனே—பாகமற

வெங்குஞ்சிதம்பரமாயின்புருவாமுன்வடிவிற்
றங்கியிருக்கவரந்தா. (௩௨)

சருமாதியாருரூடுஞ் சந்ததநாருக
மருமையெனவெண்ணியலேவேனோ—வொருமையுட
னல்லலெல்லாநீக்குமுனதம்பொற்றிருவடியிற்
புல்லுவதுமென்றேபுகல். (௩௩)

அவ்வியமாய்நீங்காவரந்தைசடமேவடிவா
மிவ்வுடம்போடின்னுமிருப்பேனோ—பவ்வமற
வுன்னுதுரையாதேயுள்ளமழிந்துன்னுருவாய்ப்
பின்னமறநிற்பதென்றேபேசு. (௩௪)

என்றும்பிணியுள்தாயெந்நாளுநைவுளதாய்ப்
பொன்றுமுடன்மயமாய்ப்போவேனோ—நன்றுதீ
தாமென்றுணர்வரியவம்மையுனதம்பதத்தி
லேமுறவேயானிருப்பதென்று. (௩௫)

மெய்போலிருந்தழியுமின்போலும்பொய்யுடலை
மெய்யாகவெண்ணிமெலிவேனோ—வையோவீ
தென்னமயலைவைத்தாயின்னமிரங்கலையோ
வுன்னுருவேநானுகவுன்னு. (௩௬)

பாருளோரெல்லோரும்பார்த்துநிந்தைபண்ணுமிடஞ்
சோருமனத்தோடிருந்துசோர்வேனோ—சாருமிட
மின்னதெனச்சுட்டறிவோடெய்திலரிதாந்துரியந்
தன்னிலியான்சேர்வதென்றேசாற்று. (௩௭)

நாறுமுட்லியானெனவுநாடுமனையென்னதென்று
மாறுபடவெண்ணிமயங்காதே—தேறரிய
வம்மைதிருநெல்லையம்போருகவடியை
யிம்மையிலேநாடியிரு. (௩அ)

ஆறுறும்பொய்யாமதிற்பயனும்பொய்யாகு
மாறுறும்பொய்யாவறிவதும்பொய்—யாறுறு
கையானைத்தந்தகழனித்திருநெல்லை
மெய்யாமவள்சரணமேவு. (௩௯)

அன்புசற்றுமில்லாதவாயிழையார்மாமாயைத்
துன்பமுற்றவாழியிலேதோயாம—லின்பரசத்
தேனூர்கழனித்திருநெல்லையம்மைபத
நீநாளுநெஞ்சேநினை. (௪0)

ஆறுநாடுமிடத்தப்பாலுக்கப்பாலா
யாறுமோடியறிவரிதா—யாறுறுங்
காணற்கினனுகுங்காரணியைக்கன்னெஞ்சே
பேணற்குறித்தாப்பிடி. (௪க)

பிடியாபகநாட்டம்பேருகுமின்பம்
விடியாவிருள்போய்விழிப்பா—மடியந்த
மில்லாவெளியாயிருந்தபடியிருக்க
நில்லாயதுவேநிலை. (௪௨)

நிலையாமோவில்லநிலையாமோசெல்வ
நிலையாமோமைந்தர்மனைநெஞ்சே—நிலையாமோ

வாகங்கரணுதியத்தனையுஞ்சொப்பனமென்
றேகநினைவாயிரு. (சங)

இருக்காதிகடேர்ந்துமின்புருவாந்தேவி
திருப்பாதஞ்சேருந்திறமாப்—பெருக்காகச்
சொல்லிலெறிகற்றுருவனிடம்போயிடினு
மல்லலறமாட்டாதறி. (சச)

அறிவேதிருவுருவாமம்மைசரணுப்
பிறியாதுநின்ருர்பெரியோர்—குறியாது
நின்ருயென்னெஞ்சேநெடுநாளியானென்னதென்று
நன்ருேசிவைவடிவைநாடு. (சரு)

நாடிப்பொறிகளைந்தினுடோறுநாணும
லோடியெடுத்தபலனென்றென்ருே—கேடுதரு
முற்பத்திநாசமுடனேகோகோதுக்கசுக
மற்பமலவெண்ணிறந்தவாம். (சசா)

ஆமேயவாவறுத்தலாமேயரந்தையொழி
வாமேயிரண்டுவினையற்றிடுத—லாமேகாண்
வாசியகமிறத்தல்வந்துவிடும்பேரின்பஞ்
சீசீயகமுகமேசெல். (சஎ)

செல்லாயிடர்நெஞ்சேதீநெறியினுடோறுஞ்
செல்விற்குறைபோந்திறமுண்டோ—நல்லோர்க
டேடற்குரித்தானதென்கழனியம்மைபதங்
கூடிலுனக்கென்குறை. (சஅ)

திருநெல்லைநாயகியம்மைவணக்க முற்றிற்று.

## பஞ்சாக்கர நாயகி வணக்கம்.

(நேரிசைக்கட்டளைக்கலித்துறை.)

கண்டபொருளல்லகாணுப்பொருளல்லகண்டபொருண்
மண்டுமிருளல்லமாயுமொளியல்லமன்னுமொளி
பண்டென்பதுமல்லவின்றென்பதல்லபராபரமா
மண்டமடங்கவடங்காப்பெருவெளியையுளியே. (க)

பஞ்சாக்கரநாயகிவணக்க முற்றிற்று.

---

## கொப்புடையாள்வணக்கம்.

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.)

பின்னுபின்னமொன்றிலதாய்
பெரிதாஞ்சத்தாசத்திலதாய்
முன்னுநின்றநிரவயமாய்
முடியாதிருந்தசாவயமாய்ப்
பன்னவேதுமில்லாமற்
பகருமநுடக்கொம்பாகு
மன்னமாயைதனையகற்று
யம்மேகொப்பையுடையாளே. (க)

மூர்க்கரிணக்கந் தவிர்ந்திடென
முன்னேருரைத்தமாற்றமதைப்

Acc-No:314
R65:31

பார்க்கிலுலகத்தொருவரிலே
 * பாவிமனமேமிகமூர்க்கன்
தீர்க்குமுனதுபதமகன்றே
 தினவிடயத்தழுந்துகின்ற
தார்க்குமுயிரேயிதையகற்று
 யம்மேகொப்பையுடையாளே. (௨)

ஆலோனிறந்துமுமைபாகத்
 தண்ணவிறந்துங்கமலமுறை
நாலானனத்தோன்முடிந்திறந்து
 நாரதாதியோரிறந்துங்
காலாதிகளுமொழிந்திறந்துங்
 ககனமாதியழிந்திறந்து
மாலோகங்களிறந்துநின்று
 யம்மேகொப்பையுடையாளே. (௩)

வேறு.

ஓங்குதனிமருப்பானையொருபாகன்கைவசமா
 யுழன்றதந்தோ
தாங்குபணைக்கரசயிலந்தனைப்பாகனெவற்றுலோ
 துன்பஞ்செய்தான் [ற்
றுங்குமிருநிலத்தின்வினையிரண்டென்னும்வல்லியினு
 றகைத்துப்பின்னு

* பாவிமனமேமிகமூர்க்கம் என்றும் பாடம்.

மோங்கிவளரிச்சையெனுந்தாம்பதனுன்மலக்குகையி
லுறுக்கிக்கட்டி. (ச)

நல்லறிவுமுதல்வீரமெலாமடங்கநாரியரா
நாகங்கவ்வ
வல்லியினிற்செலுத்தியபின்மகத்தானபெருந்தன்மை
மறக்கப்பொல்லாப்
புல்லறிவாமங்குசத்தான்மத்தகத்திலடித்தடித்துப்
புன்மைசெய்ய
வல்லலுறுமக்கயந்தானியாதென்னில்யானுகு
மந்தோவந்தோ. (ரு)

அப்பாகன்யாரென்னிலஞ்ஞானமென்பவனே
யவனேவெல்ல
விப்பாரிலெவ்விடத்துச்சென்றுலுமுனையன்றி
யேதுக்காணே
னெப்பாருமில்லாளேபூரணியேகாரணியே
யோங்குமேன்மைக்
கொப்பாளேயுன்னிடத்தில்வந்தேனென்பகைநீங்கக்
குறிக்கவேண்டும். (சு)

வேறு.

தூசேதரிக்கிலொடியுமெனுஞ்
சொல்லேபுனையுந்துடியிடையா
ராசைச்சுமையைச்சுமக்கவெனக்
கந்தக்காணச்சும்மாடு

மாசிலாளேநீதந்து
மாருச்சுமையாச்சுமக்கவைத்தா
யாசாமிந்தச்சுமையிறக்கா
யம்மேகொப்பையுடையாளே. (எ)

உன்னைக்கதியென்றடையாம
லோகோவுலகவாஞ்சையினு
லென்னேயிற்றைநாள்வரைக்கு
மிழிவாந்தொழிற்கேயிழுத்தல்கண்டாய்
பின்னையெனக்கோர்கதியில்லை
பேசாதிருந்தாலென்செய்வே
னன்னேயிந்தமதியகற்று
யம்மேகொப்பையுடையாளே. (அ)

(நேரிசை வெண்பா.)

அப்பாய்நிலமாயனலாய்வளியாகிச்
செப்புங்ககனமாய்ச்சித்தாகிக்—கொப்புடையா
ணின்றநிலையறியாநெஞ்சகமேயேன்பிறந்தாய்
பொன்றுமுடம்புறவோபோ. (கூ)

கொப்புடையாள்வணக்க முற்றிற்று.

## விஷ்ணுவணக்கம்.

(அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.)

நடந்துவிடுங்காணிருவினைக
ணாராயணாயநமவென்னி
னடந்துவிடுங்காண்பிறப்பிறப்பு
நாராயணாயநமவென்னி
னடந்துவிடுங்காண்பகையுறவு
நாராயணாயநமவென்னி
னடந்துவிடுங்காணகங்காப்பேய்
நாராயணாயநமவென்னில். (க)

(இருபத்தெண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.)

ஆசுற்றகுருதியதுவீசவேசருமம
தடர்ந்தது திரண்டுவிழ
வத்தியதுமுண்டுமுண்டாகவேநின்றதுவு
மனவரதமெனையுறுத்த
நாசத்தசைகளவைமாசுச்சுமையாகு
நடுமச்சையூழனுறு
நாளுசனுயுவவையூனனதைச்சுற்று
நாடிப்பழிப்பாகுமே
யோசைத்தொழிலாதியோரைந்துபுள்ளுக்கு
முறைகின்றகூட்டாகு
மோரொன்பதுவாசலீரைந்துவாயுக்க
ளோடித்திரிந்துலாவுங்

கேசப்புழுக்களவைகூடிப்பலவுண்டு
கிருமிகளனந்தகோடி
கீழ்வாசலோடிவருமேல்வாசலேறியது
கீழேவிழுந்துநெளியும்
வாசிக்குரங்கென்பதோடிக்குதித்திடவும்
வன்பானதருவதாகும்
வானத்தினீலமெனமேகத்தின்மின்னலென
வாரியதின்மொக்குளெனலா
மூசச்சதாநாறுமாசுற்றமலமென்ப
தொழியாதிருக்குமிடமா
மோங்குககனத்தினிடைபாங்கானவிந்திரதனு
வுண்டாயொடுங்கல்போலா
மாசைக்கழுகென்பதோடிப்படிந்திடவு
மசைவற்றகட்டையாகு
மாங்காரமென்றமுனிவாங்காதிருந்திடவு
மாலயமதாகுமிந்த
நீசத்தொழிலுடையபாவக்குடிலிதுவை
நினையாதகற்றநினைவாய்
நிர்ச்சுதந்தரமாகுமெய்ச்சுதந்தரமாகு
நீண்மாயையுடைமாயனே. (உ)
விஞ்சுநர்கப்பதுமம்வந்ததெனவெப்பொழுதும்
வியாதசித்தினிடமாய்
வெளியாகியல்லல்வடிவாகியேசந்ததமும்
வேறுகிநின்றமனதே

வஞ்சத்துவம்பேசுமிஞ்சத்தொடர்ந்தோடும்
வன்பாசகூவமுறையும்
வாராதிலிச்சையுமுன்வந்ததிலனிச்சையும்
வைத்துநிதமாயுமாயுஞ்
சஞ்சலமதாகவேபஞ்சப்புரங்களவை
தம்மில்விளையாடிநிற்குந்
தானேசெகாகிருதியாகியேநிற்குமிது
தானேசெகத்தையெல்லாந்
துஞ்சும்படிச்செய்யுமிங்கார்தடுப்பரிது
சொன்னமலைதூக்கிவிடலாஞ்
சுழல்கின்றவுததியும்பருகலாம்வெங்கனற்
றேட்டேவிழுங்கிவிடலா
முஞ்சலெனவுலைகின்றநெஞ்சமதையொருவரு
முழலாதடக்கவரிதா
மோகோவிதன்பெருமையொன்றேவனந்தவித
மொருபிரமசாகரத்தி
னெஞ்சுருவவயனுதியானவிவ்வகிலமெனு
நேரானதிரைகளாக்கி
நிமிடத்தழித்துவிடுமிந்தவலுமனதைநா
னிலையாதறுக்கவெளிதோ
கொஞ்சத்துவமானதஞ்சுகொடிகட்டுவது
கூடாதுகூட்டுவிக்குங்
குறையன்றிநிறையாதுமறைசென்றவழிசென்று
குறையாததாகுமிந்த

நெஞ்சப்பகையுமிதனஞ்சுத்தொழில்களையு
 நிலையாதறுக்கநினைவாய்
நிர்ச்சுதந்தரமாகுமெய்ச்சுதந்தரமாகு
 நீண்மாயையுடைமாயனே. (௬)

வாங்காதுசீறுபணிதாங்காதுகிட்டினரை
 வாய்நின்றதந்தமதனால்
வன்பாய்நலிந்தவுடன்முன்பாய்நடந்தகதி
 மாண்டுவிடமேலதாகித்
தாங்காதுவந்தவிடமோங்காதிறங்குபடி
 தக்கதொருமந்திரங்க
டம்மாலழிப்பதெனவென்னையொருபெண்ணரவு
 தாவிக்கடித்ததந்தோ
வாங்காலநீங்கிவிடிலழிகாலம்வருவதென
 வந்தோவடர்ந்தவிடமு
மடியானவதுதொட்டுமுடிவரையுமிகவேறி
 யல்லலோடுபோராடுதே
யிங்கார்பொறுப்பரிதையென்னுவிறக்காது
 விந்தவிடமாற்றவுரியா
னிவனென்னவெண்ணியுனையின்றடைந்தேனிந்த
 விடையூறுரூபமாகி
நீங்காதகாமனுயிர்தாங்காதுகொல்வனவ
 னிந்தையையறுக்கநினைவாய்
நினையாதிருந்துவிடிலெனையாதரிப்பதெவர்
 நீதானொருத்தனின்றிப்

பாங்கானதந்தையிலே நீங்காதவன்னையிலே
பார்க்கிலுறவொன்றுகாணேன்
பட்சத்துடன்றேடிரட்சிப்பதுன்னுடைய
பாரமிதிலையமில்லை
தூங்காது தூங்குவது தூயோர்தமக்குளது
சொல்கின்றகாமனுடனே
தூங்கப்பிறர்செல்வம்வாங்கக்கொடிக்கட்டிச்
சுற்றிச்சுழன்றவென்னை
நீங்காதவுன்னருகிலெந்நேரமெப்பொழுது
நிலையாகவைக்கநினைவாய்
நிர்ச்சுதந்தரமாகுமெய்ச்சுதந்தரமாகு
நீண்மாயையுடைமாயனே. (சு)

ஆரொருவரிணையற்றசீருடையவஸ்துவிடை
யாங்காரமென்றவலகை
யல்லிற்பழுதையிடைபல்லிற்கொடியவிட
வரவுவருமாறுவந்து
சீருடையவேதத்தையாராயவஞ்சுமது
தீர்கணடப்பதெல்லாஞ்
சிறுமையெனவெண்ணியேதன்னுடையதொழிலையே
திரமாகவெண்ணிநாடிப்
பேர்பெரியரென்னுநஞ்சீர்பெரியதென்னுநம்
போதவாழ்வதென்னும்
பெண்ணிலொருமலடிகைப்பிள்ளையெனும்ரூபமாய்ப்
பிரித்தறியிலில்லையாகு

நேரானவகிலத்திலுறைகின்றசீவர்களை
நிலையாதலைத்துவிட்டு
நீநானெனப்பேசியானுததுன்பமதி
னிமிடத்தழுத்துவிக்கு
மாரோவிதற்கிந்தவனியாயவதிகார
மளித்திட்டகன்றதந்தோ
வாவாவிதன்பெருமையயனாதிதேவர்களு
மறியவரிதாகுமாகும்
பாரதனினம்மைவிடவார்பெரியரென்றுமிகு
பாழானநட்டமிட்டுப்
பங்கேருகன்பாலுமங்கேசவன்பாலும்
பாராதிகொல்வனிடமுஞ்
சாராதுசார்ந்தவர்கடமைமயக்காதுறையுந்
தமியேனுளங்காணியாய்த்
தன்னரசுநாடுபெற்றென்னையுமயக்கிபது
தாழ்விக்குநரகிலிந்த
நேராதராவணனைநின்கருணையம்புகொடு
நிலையாதறுக்கநினைவாய்
நிர்ச்சுதந்தரமாகுமெய்ச்சுதந்தரமாகு
நீண்மாயையுடைமாயனே. (ரு)

பண்டில்லமேவியதி லுண்டானதொழில்களவை
பண்பாய்நடத்திவருகிற்
பரிவானதந்தையனைமக்களொடுசுற்றமிவள்
பாரியெனவந்தவிந்த

பாங்கானதந்தையிலெநீங்காதவன்னேயிலெ
பார்க்கிலுறவொன்றுகாணேன்
பட்சத்துடன்றேடிரட்சிப்பதுன்னுடைய
பாரமிதிலேயமில்லே
தூங்காதுதூங்குவதுதூயோர்தமக்குளது
சொல்கின்றகாமனுடனே
தூங்கப்பிறர்செல்வம்வாங்கக்கொடிக்கட்டிச்
சுற்றிச்சுழன்றவென்னே
நீங்காதவுன்னருகிலெந்நேரமெப்பொழுது
நிலேயாகவைக்கநினேவாய்
நிர்ச்சுதந்தரமாகுமெய்ச்சுதந்தரமாகு
நீண்மாயையுடைமாயனே. (ச)

ஆரொருவரிணேயற்றசீருடையவஸ்துவிடை
யாங்காரமென்றவலகை
யல்விற்பழுதையிடைபல்விற்கொடியவிட
வரவுவருமாறுவந்து
சீருடையவேதத்தையாராயவஞ்சுமது
தீர்கணடப்பதெல்லாஞ்
சிறுமையெனவெண்ணியேதன்னுடையதொழிலேயே
திரமாகவெண்ணிநாடிப்
பேர்பெரியரென்னுநஞ்சீர்பெரியதென்னுநம்
போதவாழ்வதென்னும்
பெண்ணிலொருமலடிகைப்பிள்ளேயெனும்ரூபமாய்ப்
பிரித்தறியில்லேயாகு

நேரானவகிலத்திலுறைகின்றசீவர்களை
நிலையாதலைத்துவிட்டு
நீநானெனப்பேசியாணுததுன்பமதி
னிமிடத்தழுத்துவிக்கு
மாரோவிதற்கிந்தவனியாயவதிகார
மளித்திட்டகன்றதந்தோ
வாவாவிதன்பெருமையயனுதிதேவர்களு
மறியவரிதாகுமாகும்
பாரதனினம்மைவிடவார்பெரியரென்றுமிகு
பாழானநட்டமிட்டுப்
பங்கேருகன்பாலுமங்கேசவன்பாலும்
பாராதிகொல்வனிடமுஞ்
சாராதுசார்ந்தவர்கடமைமயக்காதுறையுந்
தமியேனுளங்காணியாய்த்
தன்னரசுநாடுபெற்றென்னையுமயக்கியது
தாழ்விக்குநரகிவிந்த
நேராதராவணனைநின்கருணையம்புகொடு
நிலையாதறுக்கநினைவாய்
நிர்ச்சுதந்தரமாகுமெய்ச்சுதந்தரமாகு
நீண்மாயையுடைமாயனே. (ரு)

பண்டில்லமேவியதி லுண்டானதொழில்களவை
பண்பாய்நடத்திவருகிற்
பரிவானதந்தையனைமக்களொடுசுற்றமிவள்
பாரியெனவந்தவிந்த

வண்டக்கயவருடனென்றிடிற்சந்ததமும்
　　வலுநரகின்வீழ்வமென்று
மனதிலொருமித்திதனைவிட்டுநாமோட்சமடை-
　　மார்க்கமெதுவென்றுதேடி
யண்டரொடுமுனிவருமேத்தற்குரித்தான
　　வருளுருவமானகுருவுக்
கன்பென்னுமலரெடுத்தர்ச்சனைநிதஞ்செய்து
　　வடியிணைகள்போற்றிநின்று
தொண்டரெனவவரேவலெப்போதுமுடிசூடித்
　　துகளற்றசித்தனாகித்
தூய்தானகுரவரவர்சித்தபரிபாகமது
　　சோதித்தறிந்துபின்பு
கொண்டாடியிவருக்குவானவருமறிவரிய
　　குறைவற்றபொருளையீயக்
குணமதுடன்வாங்கியதையிப்புருடரானவர்கள்
　　　கோதின்றிநின்றுமதனைக்
கண்டார்களிந்தவிதநாயிற்கடையான
　　கசடனிறுமாப்படைந்து
கண்கெட்டபகடாகியனவரதமாதருடை
　　காலிடைகடேடிநைந்தும்
வெண்டிங்கள்வதனமுடைமின்னார்கள்சொன்னபடி
　　விலகாதுசெய்துநின்றும்
வெகுகாலமிந்தவிதம்வீணாள்கழிக்கின்ற
　　வினையேனையாள்வதென்றோ

ஞெண்டுபோலலைவுற்றமனமிலாவடியரக
 நீங்காதிருந்தவறிவே
நிர்ச்சுதந்தரமாகுமெய்ச்சுதந்தரமாகு
 நீண்மாயையுடைமாயனே. (சா)

ஓரில்வருபூதங்களோரைந்துமனமாதி
 யோரைந்துசத்தாதியா
மோரைந்துவாக்காதியோரைந்துபிராணாதி
 யோரைந்துசருஃமமாதி
நேரிலிருமூன்றாகுமிவைமூன்றுபத்தொன்று
 நிகழுபிரமாதியைந்து
நிகழுமிவையாறுநிச்சயமதொன்றாகு
 நிலையாதவேழைந்துமாம்
பாரிலொருசற்புருடர்சீரிலிவையேழைந்தும்
 பாழெனவறிந்துவிட்டுப்
பதியானவொருபொருளைமதியாலறிந்துணர்வு
 பற்றிநிலைநிற்பாமமா
சீருடையசின்மயனைமேருவெனவசையாத
 சித்தாந்தமானபொருளைத்
திராடமக்குரியமூடாடமக்கரிய
 சின்மயானந்தவடிவை
யாருமறியாதபொருளாய்நின்றபேரறிவை
 யண்டபகிரண்டநிறைவை
யத்துவிதமானவனையெத்திசையுநின்றவனை
 யணுவிலணுவாகினனைப்

பேரா திருந்தபரிபூரணமதாகின்ற
பேச்சற்றமோனவடிவைப்
பெற்றும்பெருமலேகத்தித்திரிந்துநான்
பெரிதான குருடனுகி
யாரொருவரிணையின்றிநாரிவசமெங்நேர
மல்லுபகனுட்டமாகி
யலேகின்றவினனுனேயென்றைக்கடைந்துநிலே
யதுவாவதெந்தநாளோ
நேரொருவரில்லாதபோறிவுதனுவான
நின்மலானந்தமயனே
நிர்ச்சுதந்தரமாகுமெய்ச்சுதந்தரமாகு
நீண்மாயையுடைமாயனே. (எ)

ஆழமொருமட்டின்றிநீளமதிலக்கின்றி
யகலங்கணக்கற்றதா
மறிவென்றவானந்தவாரியினிலனவாத
மயனுதிமுனிவோர்களு
மாழியொருசத்தவிதமென்பனவுமட்டகய
மவையோடுமோதிசேட
னகிலாண்டபிண்டங்களாகாயவீதிவரு
மாதபனும்வெண்டிங்களுந்
தாழ்வொன்றுமில்லாதவட்டகுலவெற்புமொரு
தடையற்றககனுதியுந்
தண்ணென்றகங்கையதுமுதலானநதிகளுந்
தாழ்வற்றதுருவவிறையுங்

கிழானசரவசரவுயிர்கள்பலயாவையுங்
கெம்பீரவுததிதன்னிற்
கிளர்கின்றவலைகள்போற்றேன்றியேவருமிவை
கிளத்தவொருவேதுவற்று
வாழ்கின்றவிவையலைகள்போலவேதோன்றியதின்
மாயுமெனவேதமறையில்
வந்தவொருவயனுதிமுந்தவானந்தகன
மயமாவதையமில்லை
பாழானதுன்பமதிலாழும்பிராந்திகொடு
பார்க்கிலிப்போதுசுகமாம்
பண்டையுண்டானசுகமதின்மீண்டடங்குமது
பார்க்கிலப்போதுசுகமாங்
சேழ்கிளருமிந்தநெறியில்லாதுதேகமது
கெடுகோலம்வந்தபோது
கிழானபுத்திகொடுதுன்பமயமாகியுங்
கெட்டேனெனப்பகர்ந்து
நீழலெனவறியாதுவீணுட்கழித்தவெனை
நின்னடியனுக்கநினைவாய்
நிர்ச்சுதந்தரமாகுமெய்ச்சுதந்தரமாகு
நீண்மாயையுடைமாயனே. (அ)

நிர்ச்சீவனுகியகறற்போதமாகிநவி
னிர்நாமரூபனுகி
நிர்லேபனுகிநிதநித்தியானந்தமெனு
நிராதாரமோனவடிவாய

நிர்த்தோஷனாகியணுவாகியேயெப்பொழுது
நிஷ்கிரியனாகிநின்று
நித்தியாபரோட்சமாய்முக்காலரகிதமாய்
நிரவயவமானபொருளாய்
நிர்க்குணவிலாசமாயெச்சருவகெதனாகி
நிருபத்திரனாகிநின்று
நிரிந்தியாகாரமாய்ப்பொருந்தலரிதாகிய
நிரானந்தரூபமாகி
நிஷ்காரணனாகியப்பிரவிர்த்தனாகியே
நிர்விஷயசுத்தனாகி
நிறைவானவிபுவாகியசலனாயகேயனாய்
நிரஞ்சனானந்தவறிவாய்
நிர்மலானந்தனாயெம்மாசுரகிதனாய்
நீண்மனதகோசரமதாய்
நெஞ்சமொடுதெவ்வற்றதேகமொருரூபமாய்
நிரதிசயமானபொருளாய்
நிர்ச்சங்கவடிவமாயெச்சங்கநாஸ்தியாய்
நீங்காதசத்துவடிவாய்
நெடிதானதிரிசியவதீதனாயனவரத
நிர்மூடவஸ்துவடிவாய்
நிர்ப்பூதவாகமாயெப்போதுமழியாது
நிலையானபிரமவடிவாய்
நீநானெனக்கூறுபேதமதுவின்றியே
நிர்த்தொந்தமானபொருளாய்

நிர்த்த்ரங்கப்புணரியாய்நின்றராமனே
நீசனையுமாள்வதென்ருே
நிர்ச்சுதந்தரமாகுமெய்ச்சுதந்தரமாகு
நீண்மாயையுடைமாயனே. (௬)

அறிகின்றவிசுவாதியபிமானிமூன்றெனவு
மாகமொருமூன்ருவது
மவத்தைதிரிவிதமெனவுமாகநவவிதமான
வவையோடுகூடுபுருடன்
பிறியாதவிடமுதற்பதவாச்சியார்த்தமாம்
போாதவுயிரிலட்சியம்
பேதமதுவின்றியவிராட்டாதிமூன்றுதநு
பெரிதாஞ்சிருஷ்டியாதி
யறைகின்றமூன்ருமவத்தையொடுவைசுவா
னாஞதியானமூன்று
மபிமானியாமென்பாாகநவவிதமான
வவையோடுகூடுமீச
னறைகின்றதிவைநடுப்பதவாச்சியார்த்தமா
மழியாதபிரமம்லட்சிய
மாதாரபாஞதியானவொருமூன்றுமே
யபிமானியாகுமென்பர்
நிறைகின்றசர்வசுகமாதியாமூன்றனையு
நிலயாமவத்தையென்பர்
நீங்காதவஸ்திபாதிப்பிரியமூன்றுமிவை
நிகழுஞ்சரீரமென்ப

ருறைகின்றவிந்தவிதமொன்பதுடனுங்கூடி
மொருபரப்பிரமமென்ப
தொன்றுயிருந்தவசிபதவாச்சியார்த்தமா
மொருசர்வசாட்சிலட்சிய
முறையாலெடுத்திங்ஙனறைமூன்றுவாச்சியமு
முழுமித்தையென்றுதள்ளி
மூன்றுனலட்சியமுமொன்றெனவறிந்துபினு
மோனத்திலவையும்விட்டு
நிறைகின்றபூரணமதாகின்றவாரியர்க
ணிலையிலெனைவைக்கநினைவாய்
நிர்ச்சுதந்தரமாகுமெய்ச்சுதந்தரமாகு
நீண்மாயையுடைமாயனே. (க0)

---

## போற்றிசங்கீர்த்தனம்.

(எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.)

அந்நாளிலிராக்கதரையறுத்தாய்போற்றி
யம்பரத்திலும்பர்களுக்ககமேபோற்றி
யிந்நாளிலெனலகத்துட்டிமிரவினை
மீடழிக்கக்கோடியினனுனைப்போற்றி
பன்னாளுமடியார்கள்பவத்தைநீக்கும்
பரிசாகத்திகிரிக்குப்பணித்தாய்போற்றி
நன்னாளுமிடர்நாளுமடியாருக்கு
நற்சுகமாமென்றுசங்கைநவிந்தாய்போற்றி. ()

எவ்விடமுமசுத்தமெனவெண்ணிநீயு
மெழுவாரிதனிலொன்றிலிருந்தாய்போற்றி
யவ்விடமுமசுத்தமதாம்பிரளயத்தி
லழிவதினுலெனவெண்ணுமய்யாபோற்றி
யிவ்விடமுமிப்படியோவென்றுவிட்டே
யிரவுபகலற்றவகத்திருப்பாய்போற்றி
யவ்விடமேயெல்லாமாய்நின்றதாலே
யதற்கசுத்தமிலையென்றேயமர்ந்தாய்போற்றி. ()

ஆனைகண்டகுருடரைப்போலறிந்தபேர்க்கு
மப்பாலாமேகனுமறிவேபோற்றி
தானையதுவிரணியத்தாற்றரித்தாய்போற்றி
சராசரமாமுலகமெலாந்தந்தாய்போற்றி
யானையதின்கோடதுபோற்கொங்கையுள்ள
வணிமடவார்வாஞ்சையெலாமறுப்பாய்போற்றி
யூனையபிமானித்தேயுழல்வேன்றன்னை
யொப்பிலாவுனக்கேயாளாக்காய்போற்றி. (௧௩)

காண்பானுங்காண்பவையுமானய்போற்றி
கருத்தனுமொண்கருமமுமாய்நின்ருய்போற்றி
பூண்பானும்பூண்பனவுமானய்போற்றி
பொல்லாதமாயையிலாய்புணர்ந்தாய்போற்றி
மாண்பானமாயவனய்நின்ருய்போற்றி
மகாசூரகுலாந்தகனய்நின்ருய்போற்றி

வீண்பயிலும்விழற்கிறைத்துவீணுடலாளும்
விரகிலேற்கருள்புரியும்விறலாய்போற்றி. (கச)

ஓருருவாய்மூவுருவாயுறைந்தாய்போற்றி
யும்பர்கடம்பெருமானேயுயிரேபோற்றி
காருருவாய்நிறைந்தபெருங்கடலேபோற்றி
கண்முதலாம்பொறியாலுங்காணாய்போற்றி
பாருருவாந்தந்தியதுபதைத்தபோது
பதைப்பறவேயங்கராப்படுப்பாய்போற்றி
யாருமறியாதவிடமகமாய்நின்ற
வாதவனேயடியனையாள்போற்றிபோற்றி. (கரு)

மனமாதியாருமறியாதான
மாயோனேமகத்துக்குமகத்தேபோற்றி
யினனாதிபுமூவரையுமிருப்பாய்போற்றி
யிருக்காதிவேதங்கட்கெட்டாய்போற்றி
பினமாகியபினமுமாய்ப்போதாகிப்
பேச்சிறந்துபிறங்குகின்றபிரானேபோற்றி
கனமானவரக்கரெலாமடியற்றேகக்
கைப்பாணமெடுத்தெய்தகாரேபோற்றி. (கசா)

* திறிபுடியாந்திமிரத்துக்கப்பானின்ற
திவாகரனேயடிபோற்றிதிருக்கேபோற்றி

---

* கீழ்வருமெதுகைநோக்கித் திரிபுடி என்றது திறிபுடியென்று மருவிற்று.

யறிவறியாமையுமாகியதீதமாகு
மப்பனேபூரணமாமருளேபோற்றி
தறியாகுமாகமதையசைத்தல்செய்யுந்
தயாபரனேயடிபோற்றிதமரேபோற்றி
குறியாதுகுறித்தறியும்பெரியோருள்ளக்
கோகனதத்துறைபளியேகுரவாபோற்றி. (௧௭)
அன்பிலாமான்மருப்பையடியோடீர்த்தே
யன்பானவாரணத்தையளிப்பாய்போற்றி
புன்புலால்வீசுகின்றபுரங்கடங்கும்
புல்லறிவுக்கெட்டாதபொருளேபோற்றி
முன்பனுப்மூன்றுலகும்புரக்காநின்ற
முகுந்தனேயடிபோற்றிமுதல்வாபோற்றி
தன்பெருமையறிந்துணர்ந்தோர்சகாயாபோற்றி
தனக்கிணையொன்றில்லாததனுவேபோற்றி (௧௮)
அன்றுலிற்றுயின்றவனேயடிகள்போற்றி
யைம்பத்தோரக்கரங்கட்கதீதாபோற்றி
நன்றுலுந்தீதாலுநலியாதான
நாரணனேயுனதுபதநளினம்போற்றி
பொன்றுதபிரமனுக்குந்தந்தையாகும்
புனிதனேபுயங்கவணைதுயின்றோய்போற்றி
யென்றுதையன்னையுடன்சுற்றமாகு
மெழிலானசீதரனேயிறைவாபோற்றி. (௧௯)
கல்லாதகயவருறுகூட்டந்தன்னிற்
கலந்திருந்தவென்னையழைத்தகாமேபோற்றி

செல்லாதமாயையிருண்மயக்கமெல்லாஞ்
சீரணிக்கத்திறந்தந்ததிண்டோள்போற்றி
வெல்லாதபகையுறவுவெல்வதற்கு
விழிக்கருணைதந்தவொருவிமலாபோற்றி
மல்லாருமரவமெனுங்கொடியோன்றன்னை
மாயாதுமாய்த்தவொருவள்ளல்போற்றி. (௨0)

இடையிடையிற் றனிச்சொற்பெற்ற
விரண்டடிக்குறட்டாழிசை.

செல்வச்செருக்கிற்றிரமாவழுந்தினேன்ராமராம-வி து
தீர்வதுமில்லை திருவருளன்றியே ராமராம
பல்வழிசெல்லிற் படர்மதமேறுதே ராமராம-நின்
பார்வையதன்றிப் பகர்மதந்தீராதே ராமராம (௨௧)

உற்பத்திநாசவுததியழுந்தினேன் ராமராம-விதற்
குன்னருளன்றி யொருவங்கங்காணேனே ராமராம
வற்பத்திலாசையனுதினங்கொண்டேனேராமராம-விந்
வாசைப்பிசாசுன் னருளன்றிநீங்காதே ராமராம. [௨

அன்னையுதரத்தவஸ்தைகள்பட்டேனோராமராம-வினி
யாற்றேனேநீயவை யற்றுவிடவேணும் ராமராம
பின்னவபின்னப்பிணக்கதற்காளானேன்ராமராம-விந்
பின்னமுனதரு ளன்றிப்பிரியாதே ராமராம. [௨௩

நீங்காக்கருவி நிபங்கணொழிந்தவே ராமராம-வுன்
னித்தியமான நிலையதடைந்ததால் ராமராம

வாங்காரமென்னு மலகையகன்றுதே ராமராம-நின்
றாதாரமான வவிழ்தமருந்தவே ராமராம (உச)
உண்டேயுறங்குவதுண்மையாநம்பினேன்ராமராம-நின்
னுண்மையறிய வொழிந்தவைநீங்கின ராமராம
பண்டேயிருந்த பயங்களொழிந்தன ராமராம-நின்
பாதமலரிற் பணிந்ததிடத்தினல் ராமராம(உரு)

விஷ்ணுவணக்க முற்றிற்று.

---

## சொரூபவணக்கம்.

(அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.)

இந்தவுலகசராசரங்க ளியாவனிடமாத் தோன்றியி டு, மிந்தவுலகசராசரங்க ளியாவனிடமாவிளங்கியிடு, மிந்தவுலகசராசரங்களியாவனிடமாவடங்கியிடு,மந்த மூலமுதற்பொருளையகத்தெந்நாளும்வணங்கிடுவாம்.

எண்ணற்கரியசித்திரமோ ரேகபடத்தி லிருப்பது போற், பண்ணற்கரியசிவேச வுலகமிருக்கும்பாவிசு ம்பே, மண்ணைப்புனலை யனல்காலை வானைத்தருசங்க ற்பசத்தி, நண்ணிப்பொருந்து மூன்றவத்தை நாளு ம்விளக்குஞ்சின்மயமே. (உ)

சுட்டுமறிவுகெட்டசுகசமனுந்துரியநிலைமேவி, யிட் டத்திருந்த தன்மயத்தோ ரிதயாம்பரத்தி லிலங்கொ ளியே, யெட்டுத்திசையோட்ண்டமெலா மெங்குநி

றைந்திதெல்லாமாய்த், துட்டக்கருத்திற் றூரமதாய்த் தூயோர்க்கணித்தாங்தொல்பொருளே. (௩)

இங்கேசரிக்குமெறும்பாதி யெண்ணம்பகத்தோ னி றிதயத், தங்கங்கிருக்குந்தற்சாட்சி யானவகண்டபூர ணமே, கங்கேயிழுக்கும் வெறும்பிணம்போற் கனக மனைவிகான்முளையோ, டிங்கேகுடும்பச்சுமையிழுப் போ ரிதயத்தெட்டாவிரும்பொருளே. (௪)

எல்லாமிறந்தநிலையாகி யானுயெனதுகற்பிதமா
மெல்லாமாகியல்லவுமா யிருந்துவிளங்குமின்னமுதே
பொல்லேனவிவேகத்தாலேபுன்மைவிடயமாக்கரைந்தே
யல்லறப்படுவதுனக்கழகோ வத்தாவண்ணுவாரணனே.

சித்தத்திருக்குஞ் சிதாகாச தேவேதேவ தேவதை யே, பத்துத்திசையும்பதினலு லோகமெங்கும்பட ரொளியே முத்திக்கரசேயாறுறின் மூலப்பொருளே மோனசுகம், புத்திக்கேதந் தவிர்த்தடிமை பொருந்த வருள்வாய்புண்ணியனே. (௬)

சொருபவணக்க முற்றிற்று.

## அருளிறைவணக்கம்.

(அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.)

சகந்தனிலே * பிறந்திறந்துவீணுகநாட்கழித்துத்
 தவித்தவென்ற
னகந்தனிலேயிருக்கின்றபரவடிவையானறிய
 வன்புவைத்துச்
சுகந்தனிலேமேலானசுகம்பரமசுகமென்றே
 தோன்றக்காட்டு
முகந்தகுருதேசிகனையனுதினமுமிருதயத்தி
 லுட்கொள்வேனே. (க)

வேறு.

பொறியாறுலுங் காண்பரிய பொருளோயுனது பதம்போற்றி, யறியாநின்று மறிந்திலனு யானுயுனது பதம்போற்றி, பிறியாப்பிறியத்தப்பாலாம் பெரியோயுனது பதம்போற்றி, சிறியேனறிவுக்கறிவான சித்தாமுகந்த குருபோற்றி. (உ)

வேறு.

பத்தியுடையவமரர்பெறும்
 பைம்பொன்னுட்டினினிதான
சித்திவிளங்குங்காவிரிசூழ்
 செல்வப்பொருள்வைமாநகரோன்

* பிறந்துவந்து என்றும்பாடம்.

புத்தியிலனுமெனதுபவம்
பொருளதாகக்கொண்டினிய
வத்துவிதத்தையளித்தவுகந்
தாளேவணங்கித்துதித்திடுவோம். (௩)

கடலேஞானவேதாந்தக்
கரும்பேயெனக்கோருந்துணையே
யிடரேயருகுமாறெனக்கோ
ரிச்சையேதுன்கழலல்லா
லுடலேபொருளேயாவியெனு
முகந்தாய்மூன்றுமுனக்கென்றுற்
பட்டும்வினையையகற்றியருள்
பரிபூரணவுன்பதம்போற்றி. (௪)

(எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.)

முத்துவெண்ணகையார் சித்தமதொக்க
முயல்வதேகருமமென்றுன்னிப்
பித்தரின்மயங்கிப் பிறவியங்கடலிற்
பிழையுற்றழுந்துறுவேனைச்
சித்தமதொக்க வாவெனவழைத்துத்
திகழுநீபிரமமென்றருளு
முத்தமகுருவே பொருள்வைமாநகர்வா
ழுகந்ததேசிகசிகாமணியே. (௫)

பிள்ளைகளுறு பிழைகள்செய்தாலும்
பெற்றவர்தனையரைமுனிந்து

தள்ளுதலுலகி லுண்டுகொலடியேன்
றவறினைப்பொறுத்தருள்புரிவா
யெள்ளுறுமிடமும் பிரிவிலாப்பொருளே
யெந்தையேயென்னுயிர்த்துணையே
யுள்ளுதற்கரிய பொருள்வைமாநகர்வா
ழுகந்ததேசிகசிகாமணியே. (சு)

ஏமநற்கிரியை வலஞ்செயுங்கதிரோ
னெழுவதன்முன்னமேயெழுந்து
சேமநீர்படிந்து செபித்துனைப்பாவுஞ்
செனனமேயெனக்குநீதருவாய்
காமனையெரித்துக் காலனையுதைத்துக்
கஞ்சனற்சிரநகத்தரிந்த
வோமெனும்பொருளே பொருள்வைமாநகர்வா
ழுகந்ததேசிகசிகாமணியே. (எ)

(அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.)

உகந்தானெனும் பேரின்பவுரு
வோராகமதாயெழுந்தருளிச்
சகந்தானறியவெனையாண்ட
தாயேவீரபத்திரப்பே
ருகந்தேதரித்துமோருருவ
மொருநாமங்களொன்றுமிலா
தகந்தான்புறந்தான்கீழ்மேலென்
றறிதிக்கடங்காவம்பரமே. (அ)

ஒன்றும்வேண்டாவுலகாள
வுண்மைமகுடந்தரித்தடியார்க்
கென்றுந்தம்மைமறைத்தவிரு
ளிரியவிளங்குந்திவாகரனே
நன்றுதீதோடியானெனது
நாடுநாமவுருவனைத்துஞ்
சென்றேயலையாதிகள்போலச்
சேருஞ்சிவமாஞ்சாகரமே. (௯)

காண்டற்கரியசிவனணு
வாகுங்காரணுதிகட்கெல்லா
மாண்டவிந்தச்சூக்கவணு
மகத்திவ்வணுவுக்கணுவுருவே
வேண்டிப்படியிற்றெழுந்தெய்வம்
விள்ளற்கரியபேதமிவை
காண்டற்குரியதெய்வமதைக்
காட்டுந்தேவதேவதையே. (௧0)

செய்வான்செய்விப்பவன்செய்கை
செய்யுங்கருவிதொழிலைந்து
மெய்யாய்விளங்கும்பரமாக
மெய்யாவுரைத்தமெய்யுருவே
யெய்யாவெவைக்குமகத்தாக
விருந்தசுத்தந்தனையடக்கி

மையாவகண்டபூரணமா
யடங்காமகத்தோமகத்துருவே. (கக)

துச்சக்குகையாமைங்கோசத்
துன்பவுருவின்மறைந்திருந்த
புச்சப்பொருளீதெனக்காட்டும்
புரணனந்தப்பழம்பொருளே
யச்சப்பிறவிமரணமெனு
மாழிகடக்கவேழைதனக்
கிச்சையின்றியருளுருவா
யெழுந்தேயொளிருமரக்கலமே. (கஉ)

ஏகப்பொருண்முப்பதமாக்கி
யிருமூன்றுக்கியொருமூன்றை
யேகத்தள்ளியொருமூன்றை
யேகமாக்குமென்மயமே
மோகத்தழுத்துமேழ்பூமி
முற்றுங்கடந்துமோகமறு
மியோகநிலமேழேறியதி
னுறுவாழ்வளிக்குங்கற்பகமே. (கரு)

தன்னைக்காணுவறிவாலே
சகத்தைப்பேதமாக்கண்டே
யென்னதிதியானிவனென்னு
மிடருற்றுழன்றேனெங்கோவே

யன்னமயக்கமுன்னருளா
லகன்றேசகமென்கற்பிதமா
மென்னையன்றிவேறன்றி
யானுக்கண்டேனென்கண்ணே. (கசு)

இந்தவுடலோடாவிபொரு
ளெல்லாமித்தையிவைவாங்கி
யந்தமில்லாவுன்வடிவை
யடியேற்கருளுந்தாதாவே
கந்தவிடயமாதியைந்துங்
கைக்கொண்டருந்திநீயிருக்க
வெந்தமதியாலியான்புசித்தே
னென்னலாகுமிறையோனே. (கரு)

ஆகாசாதிதேகாந்த
மானசகத்துன்கற்பிதமே
லேகவறிவாமுன்வடிவே
யிவைக்கும்வடிவமென்றாயே
மோகமறமுன்சொன்னவைகண்
முழுதுநீயாய்த்தோன்றிவிடி
னேகுநீனானிதெனவு
மெங்கேபோததேவதையே. (கசா)

தன்னையுணருமுணர்வின்றித்
தானும்பொய்யாங்கோசமைந்தும்

பின்னமின்றியிருந்தபடி
    பின்னுமளிக்கும்பொருளே
பொன்னங்கிரியுமணுவுருவும்
    பொதுக்காட்சியிலேசமநிலையா
மென்னையென்னுலெனக்களித்தா
    யெந்தாயென்றனுயிர்க்குயிரே. (கஎ)

ஆராவருந்தல்பொருந்தவிரண்
    டருமைபெருமையெனப்புசிக்கு
மோராவெனக்கிவ்விரண்டோடு
    முடம்புஞ்சுமையென்றுரைத்தவனே
யாராவிந்தப்பாரமெனக்
    காமோநானுன்கற்பிதநீ
பாராதிகட்கும்பரகர்த்தா
    நீயேயிவைக்கும்பகவானே. (கஅ)

கடம்போலிருக்குமுடம்போடு
    கரணங்காணுங்கரியானே
னடங்காவகண்டசிவமானே
    னந்தோவெல்லாமானேனே
யடங்காமமதையகங்கார
    மகந்தையிருக்குமாலயமாங்
கொடும்பாவிகடங்நெறியடியார்
    கூடாதகற்றுங்குருமணியே. (கக)

எல்லாமாகியல்லவுமா
யிருந்துவிளங்குமெம்மிறையே
பொல்லேலென்றனுவாஞ்சுமைசுமந்து
பொறுப்பதரிதுமிகவரிது
கல்லாமனிதர்சம்பந்தங்
கடந்தேயுன்னையடைவதென்றோ
நல்லோரன்றியுயிர்க்குறுதி
நாடிலில்லையென்றின்றறிந்தேன். (உ0)

பஞ்சகோசங்கடந்துசிவ
பாசமேறியனுதினமுந்
துஞ்சலில்லாப்பரமசுகந்
தோய்ந்தேயிருக்கும்வாணாளை
யெஞ்சலில்லாப்பெரியோர்க
ளென்றுமடைந்தாரவரன்றி
நஞ்சையமுதாவருந்தியிடு
நானுங்கரையேறுவதென்றோ. (உக)

(எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.)

துஷ்டர்களைநிக்கிரகம்பண்ணவேண்டித்
தூயோர்கட்கனுக்கிரகஞ்செய்யவேண்டி
யிஷ்டமுடனேதசாவதாரமாக
வெடுத்ததுமுன்னிந்நாளிலடியேன்றன்னைச்
சிஷ்டனெனும்படியாக்கநினைத்தபோதே
செலமாலங்கட்டியதாய்த்திரண்டதேபோ

விஷ்டமுடன்பதினொன்றுமவதாரத்தை
　　　　யெடுத்துமெனையாண்டவாறென்னேயென்னே.

உண்டானகருவியெனுமாறாறுக்கு
　　　　முன்னரிதாமதுநீயென்றுரைத்தோன்றன்னை
விண்டாலுமவன்கருணைவிளம்பவொண்ணா
　　　　விண்டுவெனுமருளுருவாவிளங்கிவந்து
கொண்டானேகுரம்பைமுதன்மூன்றையுந்தாங்
　　　　குவலயத்திலெனதுதொழிலொன்றுங்காணேன்
பண்டானபழவினைகளெல்லாஞ்சென்றே
　　　　பரமபதமெனக்குவரும்படியாயிற்றே. (உங)

அற்பமாமதுவருந்துமவனேகுற்ற
　　　　மகுற்றமெனவறியாதுபிதற்றினக்காற்
பொற்புமிகுமுனதுபத்திரசம்புசிக்கும்
　　　　புன்மையனுக்கெதுநன்மைதீமையாகு
மற்புயனேயவ்வெறியிற்பிதற்றும்பாடல்
　　　　வகையேதுதொகையேதுவழியேதாகுஞ்
சொற்பிழைகள்வந்தாலும்பொறுப்பதுன்றன்
　　　　சுதந்தரமேசுதன்வசனந்தந்தைபோல. (உச)

இப்பாரிலுடலெடுத்தேயிந்நாண்மட்டு
　　　　மிவ்வுடலேசத்தியமாவெண்ணிநைந்தே
பொய்ப்பாலனெஞ்சமெனும்வன்பேயோடும்
　　　　புகலிடமொன்றில்லாமற்புலம்புநாளிற்

கைப்பாலன்றனக்கன்னை கருணைபோலக்
கடாட்சிப்பாயெனத்துணிந்துகருதிப்பின்னு
மொப்பாருமில்லாதவுன்னைக்கிட்டி
யுடலாதிபந்தமெலாமொழியவந்தேன். (உரு)

அன்னையுதாத்திடையேயழுந்துந்துன்ப
மதுநீங்கிப்பிறக்கும்போதழுத்துந்துன்பம்
பின்னுமுடற்பிணியதனுல்வருந்துந்துன்பம்
பேதமதியதனுலேபிறக்குந்துன்ப
மின்னவுடலிறக்கும்போதபூந்துந்துன்ப
மித்தனையுநீங்கவெனக்கென்னேவென்னே
வென்னையுமோர்ஞானவடிவாக்குவித்த
விறைவனடிநீடூழிவாழ்கவென்றே. (உசா)

(எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.)

ஆகந்தானுவழுந்தவெனை
யழுத்தவுரித்தாமடமையினுற்
பாகன்கரத்திலகப்பட்டுப்
பதைத்தவிபம்போற்பதைப்பேனை
மோகந்தீர்ந்தவுகந்தானு
முதிர்ந்தகருணையாலழைத்து
வேகவறிவுன்னுருவென்றே
யிசைத்தானவனைவணங்கிடுவோம். (உஎ)

(எழுசீராசிரியவிருத்தம்,)

தடமுயர்கடல்சூழ்பொருள்வைநன்னகாந்
தனின்மனுத்தேகமாய்விளங்கித்

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
(PHONE: -436846)

திடமுடன்சுருதிசாஸ்த்ரவேதாந்தஞ்
சிந்தையிலநுபவந்தெளிந்து
படிதனிற்றனைவந்தடுத்தவர்க்கிரங்கி
பரமசற்குருவதாயுணர்த்தி
யடியவரடிகட்கேயுகந்தாட்சி
யரன்பதிகயிலைவாழ்ந்தனனே. (உஅ)

(பதினான்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.)

ஆகநற்கனகமேனிபெற்றுடைய
ராவிசுற்றுமொருபாவிக
ளாலமொத்தவிழிமேருவொத்ததன
மாசையொத்தவிலைகூறுவார்
மூகவிர்த்திகொடுமூடரத்நமெனு
மூடனானவனைவெல்லுவார்
மோகமற்றவுனைநினையுமன்பரையு
மூழ்குமாறுசெயவல்லரோ
வேகபோகசுகரூபஞானவுனை
யானுநம்பினவனாதலா
லின்னமங்கையர்கண்மையல்கொண்டுழல்வ
தென்னபாவமிதுவென்னவோ
வேகமுற்றுவருகோபனேவுகணை
வெட்டியட்டதொருவீரனே
வேதவாகமபுராணரூபமெனும்
வீரபத்திரசுவாமியே. (உகூ)

மானமுற்றுவருதாரமக்கண்மனை
மாடுநித்தமெனவெண்ணியே
மாளுசித்தமுறைதினமுற்றமட
மாய்வதெப்பகலறிந்திலே
னுமற்றெனதுமற்றலோட்டமு
நவிலுபாவமதுமற்றுமே
னட்லுற்றறிவுமீனமுற்றவறி
யாமையும்மறுவதெந்தநா
ளூனமுற்றவுடல்பற்றுதுக்கசுக
மொருவியின்பமயமாகியே
யுள்ளமென்னுமொருகவலையின்றியொளிர்
யோகியேகொடியபாவியாம்
வேனின்மாரன்மிகவீசுபாணமதை
வெட்டியட்டதொருவீரனே
வேதவாகமபுராணரூபமெனும்
வீரபத்திரசுவாமியே. (௩0)

(நேரிசைவெண்பா)

அஞ்சும்போயாறும்போயைம்பத்தோரக்கரம்போய்
விஞ்சுவெறும்பாழாகிவிட்டேனே—நெஞ்சே
யகந்தானிருக்குமகறிமிரம்போக்கு
முகந்தானுவேறென்றுணர்.

அருளிறைவணக்கமுற்றிற்று.

## ஆதியிற்பஞ்சாக்கரமருள்செய்த

# குருவணக்கம்.

அஞ்சக்கரந்தன்னையெஞ்சாதுசிந்திக்கு
மவர்கட்கோரல்லலில்லை
யயனும்படைக்கநினையான்மறலிகிட்டுகில
னடையவேண்டுவதுமில்லை
விஞ்சத்தனம்பூமிமைந்தரொடுசுற்றமகல்
வீடுதுணையென்னவேண்டார்
வீணனவாறுறுமெண்ணார்கள்சொன்னாலும்
மேலென்றுசித்தம்வையார்
மிஞ்சுற்றவிந்தவுபதேசந்தனைப்பெற்றோர்
வெகுகாலம்வாழ்ந்திருப்பர்
மெய்யனேதுய்யனேயையனேயப்பனே
வேதாந்தமோனகுருவே
மஞ்சுபதிககனமெனநிறையுஞ்சிதாகாச
வடிவமேயெமதுகுருவே
வணிகர்குலவோஷதிகடழையவுபதேசமழை
மாறுதுபொழியுமுகிலே. (க)

நீங்காதவஞ்ஞானதிமிரங்கழன்றோட
நிகழ்கின்றபஞ்சாக்கர

நிலையானகிரணந்தரித்துவந்துதவலா
னின்மலக்கனலியெனலாந்
தேங்காததெளிவுதருநால்வேதவாறங்க
திரளுந்தெரிந்தவதனற்
சித்துருவசீதரன்னுயிர்கட்கிரங்கிவரு
சின்மயவியாசரெனலாம்
போங்காலம்வருகாலநிகழ்காலமூன்றையும்
புந்தியிலுணர்ந்தவதனற்
பொற்புடையதற்பிரமசிற்சொருபவானந்த
பொருவரியசுகமுனிவனும்
வாங்காதவாங்காரதந்திக்கொரரியாகி
வந்தருளுஞானகுருவே
வணிகர்குலவோஷதிகடழையவுபதேசமழை
மாருதுபொழியுமுகிலே, (உ)

அண்டங்கடந்துநிறையீசனேபாதத்துவ
மாகுமென்றுறுதியுளதா
லற்பபலசமையங்கணேதிசெய்தொருவனுள
னுமென்னும்லோககுருவாம்
வண்டமிழ்தெரிந்துபலபாமாலையர்த்தங்கள்
வல்லையினறிந்துகொளலான்
மந்தமாருதமூலகிரியினிலுவந்தருளு
மாசில்குறுமுனிவனுகும்

பண்டுவருகாயத்ரியல்லுபகனீங்காது
பகர்தலாற்பனவர்பதியாம்
பாழானமாயைதருமியானெனறவிர்ந்தசிவ
பத்தியுளசித்துருவமே
வண்டுமதுவுண்டுறையுமுண்டகத்தெரியல்புனை
மாதவாபோதவுருவே
வணிகர்குலவோஷதிகடழையவுபதேசமழை
மாருதுபொழியுமுகிலே. (ங)

தாரார்களோர்கணந்தருகடிகைதள்ளார்கள்
சந்ததமும்வந்தபிணியைச்
சலியாதுவாங்கியநுபவியார்களென்றனுயிர்
தனுவிட்டகன்றபொழுது
வாரார்கடுணையாகநீராளமாயுருகி
வந்திடுவர்போலவழுவர்
வந்தாலுநடையற்றபிணமோடுகூடியே
மயானவரைவந்ததாலோ
தாராளமாகநானவர்களுறவென்பதுஞ்
சதாகாலமென்னையவர்கள்
சார்வாகவெண்ணினதுமிப்படிமுடிந்ததாற்
சரணமுனையன்றியுளதோ
வாராதும்வாராதுவருவதுவும்வந்ததெனு
மதிதந்தளிப்பதென்றே

வணிகர்குலவோஷதிகடமையவுபதேசமழை
    மாருதுபொழியுமுகிலே. (ச)

சுத்தலக்ஷியமானசத்தாகியேகமாய்ச்
    சொல்லரியசின்மயத்திற்
ரேன்றுநின்மலசத்திசகசிவபரமதாய்த்
    தோன்றுமதிஞனுவிதப்
பெத்தமுறுபாவனையிலிற்றைவரைவிணுப்ப்
    பிறந்திறந்தெய்த்துவிட்டேன்
பெறலரியவுன்கருணைபெற்றுநானுவிதப்
    பிராந்தியதுதீர்வதென்றே
புத்தமேமுத்தமேசத்தியமேயானந்த
    போதமேபொன்னுலகுநேர்
புகழுந்திருப்புனவைவாசனேயடியர்துதி
    பொன்ருதபரமகுருவே
மத்தனேனெனதுமதிநின்பாதவனசத்தில்
    வைத்திடுவதெந்தநாளோ
வணிகர்குலவோஷதிகடமையவுபதேசமழை
    மாருதுபொழியுமுகிலே. (ரு)

ஓயாதவேழ்கடலுமீராறுசூரியரு
    மொருசண்டவாய்வுமொருகா
லுலகத்தில்வந்துறினுமணுவுங்கலங்காத
    வுறுதியுளமேருவெனலா

மாயாதுவளர்கின்றசிட்டாணிரந்தர
மதிக்கரியகெம்பீரமா
மனதுற்றுநிற்றலாலெப்போதுநிறைகின்ற
வாரிபெனலாகுமாதோ
காயாதசீதமுடன்வெம்மையதிரண்டையுங்
கணியாதிருந்தவதனாற்
கனவடிவுபெற்றுள்ளமுண்டகக்கண்ணனிரு
கனமானபாரியெனலா
மாயாதசெல்வமதையென்றனக்கருள்புரிய
வந்தருளுமோனகுருவே
வணிகர்குலவோஷதிகடழைபவுபதேசமழை
மாறுதுபொழியுமுகிலே. (சா)

அல்லலானதுவிலாக்குபேரன்றனத்திலு
மதிகநிதிநீங்குபொழுது
மாகாதபொய்யுரைகள்சொல்லாதிருத்தலா
லயோத்திநகரதிபனெனலாந்
தொல்லேவினைருபமாய்வருபஞ்சகோசநகர்
தூளாய்த்தகர்த்தவதனாற்
சொல்லரியஞானமதயானையென்றியாவருந்
துதித்துப்புகழ்ந்துசொலலா
நல்லசிசுபொல்லாதசேயென்றுதாயுமிரு
நாட்டந்தவிர்ந்தருள்வபோ
னுடுமுலகுயிரைநீசமமாயளித்தலா
னன்மையுறுமன்னையெனலாம்

வல்லையெனதுட்லாவிநிதிநானளித்திலேன்
வலியவேற்முண்டகுருவே
வணிகர்குலவோஷதிகடமையவுபதேசமழை
மாருதுபொழியுமுகிலே. (எ)

ஆசைப்பெரும்புணரிகாமக்களஞ்சிய
மாங்கார பீடநீங்கா
வஞ்ஞானவாலயம்பொய்யினுக்கோர்புற்
றகந்தைக்கோர்சூழலாகுங்
காசுற்றகோபாக்கினிக்கினியகாட்டமாங்
கடுலோபன்வாழுமனையாங்
கருதின்மிகுமிழிவுடையமற்சரண்முதற்பெயர்கள்
காதலோடுறையுநகராம்
பேசுற்றவிவ்வகைக்கிடமாயிருந்துநான்
பெற்றபேரின்னம்வேண்டாம்
பேசரியமுத்திக்குவித்தாகுமுன்கருணை
பெற்றுப்பிழைப்பதென்றோ
வாசமுறுமுண்டகத்துறைபவன்பொல்லாத
மறலியிடம்விட்டிடாதே
வணிகர்குலவோஷதிகடமையவுபதேசமழை
மாருதுபொழியுமுகிலே. (அ)

சின்மயவிலாசராம்பரமபதிநாதரைச்
சிந்தித்திருக்குமுறையாற்

சித்தமுதலாறிந்தியங்களுமடக்கலாற்
திருவாதவூரெனலாம்
பொன்மயமதானவுருமின்னுர்கள்சாலமது
பொன்றத்தொலைத்தவதனுற்
புகழுடையகங்கையின்சுதனுகுமனுசமும்
புகழவருசேனுபதி
யென்பெயர்தரித்தலானிருண்மலமறுத்தலா
லிருஞானுதியசுர
ரெட்டுணையுமிச்சமறவெட்டுமொருவேலுடைய
வெழிலானகந்தனெனலாம்
வன்பணிகள்புரிபவர்களாறுறுமுள்ளதால்
வருமுருகனுகுமையா
வணிகர்குலவோஷதிகட்டமையவுபதேசமழை
மாறுதுபொழியுமுகிலே. (சூ)
பந்தமுறுதொந்தவினைசிந்தனையிலெண்ணுத
பரமபதமானகதியைப்
பகர்கின்றவுயிர்கணிதமடையவருள்புரிதலாற்
பார்வதிசமேதரெனலா
மிந்தவுயிர்மிடியகலவந்தகுருசுவாமியுன்
னிருபாதநிதியருளலா
லிருவானவரசுபுகழ்வரமானபதமுதவு
மெழிலாரணத்தனெனலாந்
தந்தவினைவழிநின்றுதுன்பமுறுமெம்மனோர்
சனியாதவமுதமயிலச்

சந்ததமுவந்துதவுகின்றதாலிர்ங்கிரண
சந்திரனெனப்புகலலாம்
வந்துபிறவாதவகையடியனுக்கருள்புரியும்
வள்ளலேபரமகுருவே
வணிகர்குலவோஷதிகடமையவுபதேசமழை
மாறுதுபொழியுமுகிலே. (௧0)

ஆதியிற் பஞ்சாக்கரமருள்செய்த குருவணக்கம்
முற்றிற்று.

---

## முத்திநிச்சயம்.

(நேரிசைவெண்பா.)

அறிவானறிபொருளோடாமுணர்வும்பொன்றிக்
குறியாவையுமாந்துகுன்றிற்—பிறியாது
நித்தம்பரசுகமாய்நிற்பதுவேமுத்தியதற்
கர்த்தமிதுசொன்னேனறி. (௧)

நித்திரையுஞ்சாக்கிரமுநீண்மறப்பெண்ணத்தாலா
மத்தனையுந்தோன்றாதகத்தடக்கிச்—சித்திரம்போ
லென்றிருப்பதன்றுமுத்தியெய்துமிதுவேசுகமா
நன்றிதுவேயர்த்தமெனநாடு. (௨)

காண்பானுங்காண்பவையைக்காணுமிடத்தேகமதாய்ப்
பூண்பனவால்வாதனையும்பூண்டிடுமே—வீண்பயிலும்
வாசனையைச்சித்தத்தில்வையாததுமுத்தி
யாசிலிதற்கர்த்தமிதேயாம். (௩)

உட்புறம்பாலியானெனதென்றுற்றுவருமவற்றை
நட்புற்றுநாடோறுநைந்துநைந்தே—யெய்ப்புற்றுப்
போகாமலெப்பொழுதும்பூரணமாமன்னமுத்தி
யாகாதோவர்த்தமிதேயாம். (௪)

உள்ளசுகமீதென்றுணரவறியாதமனக்
கள்ளலினுலிவ்விடயக்காங்கிசையு—மெள்ளமெள்ள
வந்ததேயிவ்விடயவாஞ்சையிறக்கமுத்தி
சிந்தையிதேயர்த்தமெனச்சேர். (௫)

முத்திநிச்சய முற்றிற்று.

---

## தெய்வநிச்சயம்.

(நேரிசைவெண்பா.)

சுட்டுமிட்டுண்டெனலாய்ச்சுட்டற்றுருவில்லாத
துட்டமனச்சஞ்சலத்திற்றோயாம—லெட்டரிதா
யெவ்வுருவுமெங்குமிரும்பொருளாய்நின்றதெதோ
வவ்வறிவேதெய்வமெனலாம். (க)

காண்பனவாலுண்டெனலாய்க்காண்பதற்குருவில்லாத
வீண்பயிலுமாயைவிதிரித்தமதாய்—மாண்புடைய
முப்பாழ்கடந்தமுதற்பாழாமூலமெதோ
வப்பொருளேதெய்வமெனலாம். (உ)

தெய்வநிச்சய முற்றிற்று.

---

## மனத்திற்கறிவுறுத்தல்.

(எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.)

நன்றுகளுந்தீதுகளுநமதிடத்திலில்லை
நமதிடத்திலுண்டானநினைவதனாலுண்டு
நன்றுகளுந்தீதுகளுநினைவிறந்தாலில்லை
நமதுமயம்வெறும்பாழானாடியதுவாவாய்
நன்றுகளுந்தீதுகளுநினைவுமயமாகு
நமதுமயநினைவாகுநாடியுணருங்கா
னன்றுகளுந்தீதுகளுமின்றிநிறைகின்ற
நமதுமயமெல்லாமாநாடியதுவாவாய். (க)

(கலிவிருத்தம்.)

அம்மாவிகமிதுவேபரமிதுவென்றனவாதந்
தம்மான்மிகநொந்தேயுமிக்குத்திச்சலியாதே
கைம்மாறறுமுடலைத்தினங்காக்கக்கரையாதே
சும்மாவிருசுகமேவருந்தொடர்ந்தாயிலைமனனே. (உ)

(நேரிசைவெண்பா.)

வேண்டாதேகண்டவெல்லாம்வேண்டினுற்பந்தமுனைத்
தீண்டாதோசென்மவினைதீர்ந்திடுமோ—மாண்டாலுந்
திராவியாதியுனைச்சிக்கியாளாக்கிவிடும்
பாராய்தவிரும்படி. (ந)

அச்செல்லாம்பொய்யென்றறிந்தாலதிலொருவன்
றுச்சமறநன்மையறச்சொன்னாலு—மச்சொல்லும்

பொய்யோவதுமெய்யோபோதமில்லாநெஞ்சமே
யையோவிதினேவாரார். (சு)

அத்தியந்தாபாவமாகுமிழிகோசமைந்தும்
புத்தியினுனித்தியமாய்ப்பொற்புறல்போற்-புத்தியினு
லில்லாதாய்நீங்காதோவேழமனமேயிதனிற்
புல்லாதிருந்தவனேபொய். (ரு)

மனத்திற்கறிவுறுத்தல் முற்றிற்று.

---

## பொதுவாகக்கூறியது.

(எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.)

விண்ணாதிபூதமெலாஞ்சிவமேயாகு
மெய்யுருவும்பொய்யுருவுஞ்சிவமேயாகுங்
கண்ணனவேதமெலாஞ்சிவமேயாகுங்
கருதுகின்றநினைவெல்லாஞ்சிவமேயாகு
மெண்ணிறந்தபேதமெலாஞ்சிவமேயாகு
மிப்படியேதினந்தோறுங்காண்பானுகிற்
பெண்ணுணுமலியாகும்பேதமின்றிப்
பிரமமயமாதறிண்ணம்பேதமின்றே. (க)

அகவிருத்திதனிலுண்டாஞ்சீவனுக்கே
யதிட்டானஞானவடிவல்லவென்று
லகவிருத்திதானிதமாவாகும்போதே
யவனெனதென்றியாதொன்றையறியவொண்ணு

வகவிருத்திசெனித்தவிடமகண்டமாகு
மல்லவெனிலவைசெனித்தவடிவமாகா
வகவிருத்திசெனித்தவடிவாதலாலே
யதிட்டானந்தனிலடங்குமையமின்றே. (உ)

(நேரிசைவெண்பா.)

சீறும்புயங்கஞ்சினமிகுத்ததென்றறிந்து
பாறுறுமெய்யோர்பயமான—வாறதுபோ
லாங்காரவீணாருகேயறிவுடையோர்
தாங்காமற்சொல்லார்தகும். (௩)

எண்ணிப்பலபொருளையீட்டினுனுலு
மண்ணிற்பெரியோனுய்வாழ்ந்தாலும்—விண்ணதிலே
மூடாவிழியுடையோரானுலுமுத்தியினைக்
கூடார்கட்காளாக்குறி. (௪)

சாதிக்கிழுக்கென்றுந்தன்குலத்துக்கீனமென்றும்
பேதிக்குமூடனேபேசக்கே—ளாதிக்கே
யில்லாதசாதிக்கிருப்பிடமீதென்றுரைத்தா
னல்லாரதைநாடுவார். (௫)

தன்மயமாஞ்சத்திதானினைக்கநாமவுரு
மின்மயம்போற்றோன்றிவிளிந்திடுமே—யென்மயமே
யாமேயவையெல்லாமானுல்யானும்மெனதும்
போமேசிவமயமாய்ப்போம். (சு

ஆதினடுவந்தத்தழியாதிருந்ததெந்தச்
சோதியன்றேவைந்தாந்தொழில்செய்யுந்-தீதிலவை

பேராரெனதுமயமென்றறிந்தாலெத்தொழிலு
மாரார்சிவமயமேயாம். (எ)

தீதுநலம்பாவமறஞ்சேதனமாஞ்சின்மயமே
சேதமறநின்றுதினம்புரியு—மாதலினு
லிவ்வுருவமென்மயமேயென்றுணரிலிந்நான்கு
மவ்வுருவமாஞ்சிவமேயாம். (அ)

கும்பிடவோமேலில்லைகும்பிடவோகீழில்லை
கும்பிட்டுநீங்கக்குறையில்லை—கும்பிடும்பே
ராரோவறியேன்யானுகாகாவோகோகோ
சீரேதுமில்லை சிவம். (கூ)

செய்யுந்தவமுந்திரயோகநிஷ்டைகளுஞ்
செய்யுமுபதேசந்திரபூசை—யையமறச்
சொல்வேன்சுதந்தரனையன்றியுலகென்ப
தில்லென்றுணறுமிதே. (க0)

தெய்வவடிவறிந்தத்தேவதையைப்பூசைபண்ணித்
தெய்வவடிவாந்திறங்கேளீ—றையமினுல்
சற்குருவாற்ருனுணர்தல்சந்ததமுஞ்சிந்தித்த
னிற்குமதுவான நிலை. (கக)

ஐஞ்ஞூற்றுவீசாடிபிணையைச்சேர்ந்தவுனக்
கெஞ்ஞான்றுநெஞ்சேயிடருண்டோ—பைஞ்ஞாகந்
தாங்கும்புவிவிளங்கச்சஞ்சரிக்கும்பானுகண்ட
தூங்கிமம்போகாதோசொல். (கஉ)

ஈயக்கதிராமிலக்கணமுமின்குறளு
மாயப்பொருளாவறைந்தாலு—நோயகலா
துன்னைமறந்தவொருதுரியபூமியிலே
மன்னியிருக்கமதி. (கங)

பொதுவாகக்கூறியது முற்றிற்று.

சிவமயம்.

# புத்திக்கறிவுறுத்தற் கண்ணி.

(வெண்செந்துறை.)

பஞ்சவிதவிடயம்பாங்காய்ப்பாம்புசிக்க
நெஞ்சேநீநானெனவேநிச்சயிப்பதென்னமதி. (க)

அஞ்சுவிதவிடயமாருமறிவாயிருக்கப்
பஞ்சவிதமாகப்பார்த்துழல்வதென்னமதி. (உ)

காண்பவனைக்காணாதுகாண்பவையைக்கண்டுழன்று
வீண்காலமாகவிழற்கிறைப்பதென்னமதி. (ங)

ஈசன்வடிவாமேயெட்டுருவுமென்றுணர்ந்து
பாசந்தவிர்ந்தொழியப்பாராததென்னமதி. (ச)

காரியரூபங்களெல்லாங்காரணமாக்காணும
ஞரிமனையென்னதெனநாடவந்ததென்னமதி. (ரு)

சும்மாதனியிருக்குந் தூய தாந்துரியமதி
லம்மாதினமிருப்பதாகாததென்னமதி. (சா)

எவ்வுருவுநாடினிராகவெகுளியறத்
தவ்வலறச்சிவமாய்ச்சார்ந்தறியாதென்னமதி. (எ)

நானெனவுநீயெனவுநாடலுடலைக்குறித்தே
ஞானமயமொன்றெனவேநாடாததென்னமதி. (அ)

பொய்யைப்பொருளாகப்புன்மதியாற்கண்டதுபோன்
மெய்யையுணர்ந்தத்துவிதம்வேண்டாததென்னமதி.

எப்பொழுதுந்தன்னையன்றியாதுவந்ததியாதொழிந்த
தப்படியேயெண்ணியமையாததென்னமதி. (க0)

மாயாவிருளிரவில்வந்தகனுவிட்டொழிந்து
நீயாநிலைதனிலேநில்லாததென்னமதி. (கக)

முன்னடங்கும்வாதனைகண்முற்றுந்தவிராமே
யின்னமினந்தாங்கியிரங்குவதுமென்னமதி. (கஉ)

ஆகாதவாதனையாலல்லறினம்பட்டுழன்று
மோகோவினந்தவிராதுழலுமதியென்னமதி. (கங)

பேதமுறுபுந்திதனைப்பேதித்தகற்றும
லாகமயல்கொண்டதுவாயாகுமதியென்னமதி. (கச)

பொல்லாக்கயவர்புகும்வழியிற்செல்லாம
னல்லோரடங்குமிடநாடாததென்னமதி. (கரு)

கற்பிதத்தைமெய்யாகக்கண்டுகெண்டுதுன்பமுரு
தற்புதமாஞ்சின்மயநீயாகாததென்னமதி. (கசு)

சுட்டற்றவெட்டவெளிதோயாமனுமவுருச்
சுட்டியனுதினமுந்துன்பமுறலென்னமதி. (கஎ)

நிற்கநிறுத்தநிலையாதநீசமனத்
துற்சங்கநீங்கிச்சுகமாகாதென்னமதி. (கஅ)

தட்டத்தடுக்கத்தடைபடாநீசமனத்
துட்டப்பிசாசோடுந்தோயுமதியென்னமதி. (ககூ)

கட்டப்பிடிக்கக்கடந்தோடுமீனமனச்
சுட்டகற்றித்தற்பதத்தைத்தோயாததென்னமதி. (உ0)

நிர்க்குணனேமுக்கணனுய்நின்றுசகங்காட்டியட்டு
நிர்க்குணனுய்நிற்பதெனநில்லாததென்னமதி. (உக)

சந்ததமுஞ்சின்மயமாய்த்தானிருந்தாற்றெருந்தவினை
வந்துருமோவென்றுமதியாததென்னமதி. (உஉ)

கண்டவெல்லாம்பொய்யாகக்கண்டிருந்துங் காண்பவை
யுண்டெனவேபற்றியுழலுமதியென்னமதி. [யை

புத்திக்கறிவுறுத்தற்கண்ணி முற்றிற்று.

# நெஞ்சோர்டிரங்கல்.

## பாயிரம்.

(நேரிசைவெண்பா.)

மேலாந்துரியநிலம்விட்டுவிடயத்துழன்று
நாலாவிதவரந்தைநண்ணிநண்ணி—மாலாகி
நின்றமனத்தோடிரங்குநீதிதனையிதயந்
துன்றியுறையைங்கரனேசொல். (க)

மஞ்சூருமஞ்சன்மகன்றனுவினூறுற்ற
நஞ்சாறுங்கண்டத்துநக்கனிட—மெஞ்சாது
புல்லியிருந்தருளும்பூரணிநெஞ்சோடிரங்கல்
சொல்லுமென்றனுவிருந்துசொல். (உ)

பாயிரமுற்றிற்று.

---

(வெண்செந்துறை.)

சீரார்கழனித்திருநெல்லையம்மைபதஞ்
சாராமலென்னேசனித்திறந்தாய்நெஞ்சகமே. (க)

இதுவேசிவமென்றுமீதுமனமென்று
மதனுல்விளங்கிலுனக்கறிவெங்கேநெஞ்சகமே. (உ)

பன்னாளுங்காண்பவற்றைப்பற்றிநொந்துநைந்திருப்ப
தெந்நாடொலைத்தறிவாயென்றிருப்பாய்நெஞ்சகமே.

எந்நாளுமின்பநிலையீதென்றறிந்திருந்தும்
பன்னாளுந்துன்பப்படலாமோநெஞ்சகமே. (ச)

அச்சந்தவிர்ந்தநிலையாமதனைச்சோாமற்
றுச்சவினைபுரியத்துணிந்தனையேநெஞ்சகமே. (ரு)
தன்மயமீதென்றுணர்ந்துந்தானதுவாய்நில்லாம
லின்னமிடாடைவதென்னமதிநெஞ்சகமே. (சு)
ஈதெனதியானிவனென்றெண்ணியெண்ணியேழையர்போற்
றீதடைந்தாற்சீதளமுஞ்சேருமதோநெஞ்சகமே. (௭)
பாசவடவிதனைப்பற்றிப்பயமடைந்தான்
மாசுதவிர்ந்தவெளிமன்னலுண்டோநெஞ்சகமே. (அ)
வாசனைகளியாதுமிலாமன்னுதுரியந்தனிலே
தேசுபெறநிற்கத்திகைப்பேனோநெஞ்சகமே. (கூ)
சங்கற்பசாலந்தவிர்ந்தசமபாவனையிற்
றங்கிப்பாமசுகஞ்சார்வதென்றேநெஞ்சகமே. (௰)
பாராமற்பார்க்கும்பரமவிழிபெற்றிருந்தா
லாரேதுபேரேதுலகேதுநெஞ்சகமே. (௰க)
இந்தப்பெரும்பிரமாகாரநிலையெய்தாமற்
றொந்தப்பிராந்திநிதந்தோய்ந்தனையேநெஞ்சகமே. ()
மோகாதிகாரியங்கண்முற்றுமிறந்தபதத்
தோகோகோசோாதுழல்கின்றாய்நெஞ்சகமே. (௰ங)
ஐம்பொறியுமைம்புலனுமாறியடங்குமிட
நம்பிநம்பிநீபடையுநாளென்றோநெஞ்சகமே. (௰ச)
பற்றுமற்பற்றும்பாமசுகநிஷ்டைதனைப்
பெற்றிருந்தாலென்னகுறைபேசாய்நீநெஞ்சகமே. ()

ஆன்மவுருவகண்டமந்தவுருவாகாமற்
ருனெருவன்போலாய்ச்சலித்தனையேநெஞ்சகமே. ()

சச்சிதானந்தத்தனிவீட்டின்வாழாம
னச்சுருவாங்காட்சிதனைநாடிநைந்தாய்நெஞ்சகமே. ()

சான்ருந்துரியமதைச்சாராமனுடோறுந்
தோன்றுவிடயமதைச்சுட்டினையேநெஞ்சகமே. ()

பாவனைகளியாதுமிலாப்பானநிலையெய்தாமற்
றீவினையைச்சேர்வதென்னசிந்தனையோநெஞ்சகமே.

தூங்காமற்றூங்குஞ்சுகநிலையிற்செல்லாது
நீங்காமற்றுச்சவினைநீபுரிந்தாய்நெஞ்சகமே. (உ௰)

காண்பவற்றைமுப்பொழுதுங்காட்சியறத்தோற்றுவிக்கு
மாண்புடையசித்தின்மடிவதென்ருேநெஞ்சகமே, ()

நித்தாங்கமுந்நீர்போனின்றுவிளக்கறிவின்
வைத்தபடிரமித்துவாழ்வதென்ருேநெஞ்சகமே.(உஉ)

* திறிபுடிக்குஞ்சாட்சியெனுஞ்சின்மயமாய்நில்லாமற்
குறிபிடித்துநாடோறுங்குலேகுலேந்தாய்நெஞ்சகமே.()

அவத்தாத்திரயவதிட்டானமாயிருந்து
பவத்தையழிக்காமற்பாழ்பட்டாய்நெஞ்சகமே.(உச)

முக்குணமுங்கெட்டமுதற்பாழைச்சாராம
லக்குணத்தோடொன்றியலேந்தனையேநெஞ்சகமே.()

கோசமைந்துந்தோன்ருக்குருதுரியஞ்சேராமற்
பாசமெனும்வலேக்குட்பட்டுழன்ருய்நெஞ்சகமே. ()

---

* திரிபுடி என்றது-எதுகைநோக்கித் திரிபுடி என மருவிற்று.

எல்லாமிறந்தநிலையீதென்றுகண்டிருந்து
நில்லாமலந்தநிலைநீங்கினையேநெஞ்சகமே. (உஎ)

ஆறுறின்மேலாமறிவுமயமாகாம
லோராறினேடியுழல்வதென்னேநெஞ்சகமே. (உஅ)

துன்பத்துவிதந்தொலைந்தசுகநிஷ்டையிலே
யின்பத்துருவாயிருப்பதென்றோநெஞ்சகமே. (உகூ)

சிவேசுரசெகத்தைச்சித்தொன்ருத்தோற்றுவிக்கப்
பாவனையாற்பேதித்துப்பற்றுகின்றாய்நெஞ்சகமே. ()

ஆமையுறுப்பையடக்குதல்போற்காண்பவையாந்
திமைதனிற்புலனைச்சேர்க்காதேநெஞ்சகமே. (௩க)

சத்தோடசத்துஞ்சதசத்துமாகாத
சித்தம்பலவாஞ்செகம்பொருளோநெஞ்சகமே. (௩உ)

சித்துருவாற்றேன்றுஞ்செகந்தனையீதின்னதென்று
நித்தமவதானஞ்செய்நீயொழியாய்நெஞ்சகமே. (௩௩)

எத்தனையோகோடியியல்புரைத்துங்கேளாம
லத்தனையும்பாழாவயுர்த்தனையேநெஞ்சகமே. (௩ச)

எட்டுருவுமீசன்மயமென்றறிந்துமந்தமதி
விட்டவனைப்பற்றிவிடுதலுற்றாய்நெஞ்சகமே. (௩ரு)

நிவாததலதீபநிற்பதினில்லாமற்
குவாலப்பிணிக்குரம்பைகூடினைந்தாய்நெஞ்சகமே.

சித்திரத்திலேவரைந்ததீபம்போனில்லாமற்
கத்தித்தலைவெடிக்கக்கற்றனையேநெஞ்சகமே. (௩எ)

அரவின்களமறுக்கிலேந்தலையின்கேட்டிற்
பரமவுருநீயடையிற்பாறுமைந்துநெஞ்சகமே. (௬௮)

தத்தாயபிண்டமதிற்சார்ந்தசலம்போற்றுரிய
வத்திலடங்கியதாய்வாழ்வதென்றோநெஞ்சகமே. ()

எண்ணெயிருப்பற்றவெழிற்றீபம்போலவுநீ
யெண்ணரியவிச்சைதவிர்ந்தென்றழிவாய்நெஞ்சகமே

இல்லாதிறக்குமிழிகுரம்பைவாசனையைப்
புல்லாதுமெய்யுணர்வைப்புல்லலென்றோநெஞ்சகமே.

சும்மாவிருந்துசுகந்தோயாமற்றன்னினைவா
லம்மாசுகமடைந்தோராருரைப்பாய்நெஞ்சகமே. ()

போராட்டப்பட்டபுரமெடுத்தவிவ்வரையில்
சீராட்டிலென்னசுகஞ்சேர்ந்தனைநீநெஞ்சகமே. (சங)

இல்லாளுமில்லத்திருநிதியுமின்றமக
வெல்லாமறந்திருப்பதென்றுரையாய்நெஞ்சகமே. ()

பந்தநமக்குண்டதனைப்பாற்றமுத்திவேண்டுமெனு
மிந்தநினைவிரண்டுமென்றயர்ப்பாய்நெஞ்சகமே. (சரு)

மறப்பதுவேநல்லதெனமாணவர்தாஞ்சொல்ல
வறத்தினமுநீநினைத்தேயல்லலுற்றாய்நெஞ்சகமே. ()

எல்லாமறந்துவிட்டாலிவ்வுடலநீங்குமெனி
னில்லமிலாப்பித்தனிருப்பதுபோனெஞ்சகமே. (சஎ)

முற்றுமலமாயிருக்குமூடமதாமிவ்வுடலிற்
சற்றும்விரத்தியுண்டாய்ச்சார்கிலையேநெஞ்சகமே. ()

செய்ததுவேசெய்யத்தினந்துணிந்துசெல்வதுவே
யுய்யும்வழியென்ளுெருப்பட்டாய்நெஞ்சகமே. (சகூ)
பத்துத்திசையும்பதினுன்குலகுமற்றுஞ்
சித்தசித்துஞ்சிற்சடமுஞ்சிவரூபநெஞ்சகமே. (ருய)
பண்ணவிதன்பாதநிழற்பற்றியதுவாயிருக்கி
லெண்ணரியவிச்சையிரிந்தோடுநெஞ்சகமே. (ருக)
என்னிதயத்துள்ளேயிருந்ததிருநெல்லைபதத்
துன்னினைவுநீயுமொழிவதென்றேநெஞ்சகமே. () .
அண்டமெலாந்தோற்றியழிந்தபதமாயிருந்தாற்
பிண்டவுபாதியன்றேபோராதோநெஞ்சகமே. (ருஙு
எல்லாவுலகுமிறந்துமிறவாதபதஞ்
செல்லாதுகாண்பவற்றிற்சிக்கினையேநெஞ்சகமே. ()
தோன்றுசிசுவுணர்வுதுகளற்றுக்காணுதலின்
மான்றவுருவந்தோன்றவருவதென்றேநெஞ்சகமே.()
தோற்றுருவையீதெனவேசுட்டுமயலாமறிவை
மாற்றியகண்டசுகவாழ்வடைவாய்நெஞ்சகமே. (ருசு)
விட்டேனுலகமெனும்வீணுனவாசனையுங்
கெட்டிலங்குமன்னையடிகிட்டுவையோநெஞ்சகமே. ()
எத்திக்குந்தானுயிறந்துபிறவாதடைந்தாற்
செத்துப்பிறத்தலன்றேதீராதோநெஞ்சகமே.(ருஅ)
ஒன்றேடுந்தாக்கற்றுறுதுரியாதீதமதிற்
சென்றுசிவமாகவெந்நாட்செல்லுமதோநெஞ்சகமே.()

மெய்யுருவைநாளும்விரும்பாதிருந்தவிந்தப்
பொய்யுருவாற்பட்டதுயர்போதாதோநெஞ்சகமே.()

பன்னாளுங்காண்பவற்றைப்பற்றிப்படுந்துயா
மென்னாலினிச்சகிக்கவேலாதேநெஞ்சகமே. (சுக)

என்னாட்சிவவடிவையான்மறந்ததன்றுமுத
லுன்னோடுங்காண்பவற்றையுற்றுழன்றேனெஞ்சகமே.

இற்றைவரைக்காண்பவையையெய்தியெய்தியென்னசு
பெற்றனைசொன்னாலறியாய்பேதமலநெஞ்சகமே.[கம்

எல்லாமிறந்ததிருநெல்லையிணையடியைப்
புல்லவகமிதமும்போகாவோநெஞ்சகமே. (சுச)

வித்தைச்செருக்கடைந்துவீணாட்கழிக்குமருட்
புத்திக்குருடர்நெறிபோகாதேநெஞ்சகமே. (சுரு)

நிழனெருப்பாய்க்கண்டநினைவுதவிராதே
விழலுக்குநீரிறைக்கும்வேலையுற்றாய்நெஞ்சகமே. ()

நாரியிலம்பூமிதனநாசமுறுமென்றவெலாம்
வாரியினிற்பெய்தமழையானநெஞ்சகமே. (சுஎ)

ஓயாதுழலுமதியோய்வதிலையுன்றனக்கு
வாயாற்பிதற்றமதிவந்ததென்னோநெஞ்சகமே. (சுஅ)

பொல்லாதவிக்காயம்புல்லுமதிவாசனைக
ளெல்லாமிறந்தவெனவென்றிருப்பாய்நெஞ்சகமே. ()

காரார்குழன்மடவார்கற்பித்தவேவல்செய்து
தூராக்குழிதூர்க்கத்தோன்றினையேநெஞ்சகமே. ()

விண்ணாதிகண்டவிசுவமிறவாதிறந்த
கண்ணாந்துரியமதைக்கையிகழ்ந்தாய்நெஞ்சகமே. (எக)
ஆரணங்களீதென்றறிவரியதென்கழனிப்
பூரணியைநீமறந்துபுண்பட்டாய்நெஞ்சகமே. (எஉ)
அல்லும்பகலுமகமிதந்தீரென்றதனாற்
கல்லுங்கரையாதோகடைப்பட்டநெஞ்சகமே. (எங)
இல்லந்துறந்துசுகத்துறவையெய்தாம
லல்லற்படுமியல்பையார்விதித்தார்நெஞ்சகமே. (எச)
பற்றுமற்பற்றும்பரமசுகநிஷ்டைபெற்றாற்
பற்றுருவிலென்னதெனும்பார்வையுண்டோநெஞ்சகமே.
தோன்றுமற்றோன்றுந்துரியநிலங்கண்டிருந்தா
லூன்றுதுபற்றிவிடுமோர்வுண்டேநெஞ்சகமே. (எசு)

நெஞ்சோடிரங்கல்முற்றிற்று.

---

## தெய்வமேயென்னுங்கண்ணி.

அண்டமும்பிண்டமுமானதுங்காண்கிலேன்றெய்வமே—யிந்த—வண்டமும்பிண்டமும் வேறென்றறிந்திலேன்றெய்வமே. (க)

ஆதியுமந்தமுமில்லாவரும்பொருடெய்வமே—யிந்தக்
கோதாமுடம்பாய்க்குறித்துவிளங்குதேதெய்வமே. ()
இன்பவுருவாயிருந்தபரஞ்சுடர்தெய்வமே—யிந்தத்
துன்பசுகவினைத்தொந்தமடைந்ததேதெய்வமே. (ங)

ஈகையுமேற்றலுமில்லாவிரும்பொருடெய்வமே-யிந்த
வீகையுமேற்றலுமாகியிருந்ததேதெய்வமே. (சு)

உண்மையுமின்மையுமின்றியிருந்ததேதெய்வமே-யி
ந்த-வுண்மையுமின்மையுமாகிவிளங்குதேதெய்வமே.()

ஊனமுறும்பந்தவோதமொழிந்ததேதெய்வமே-யிந்
தவூனமுறும்பந்தவோதமடைந்ததேதெய்வமே. (சு)

எப்பொருளாவதுமெய்ப்பொருளென்பதுதெய்வமே-
யிந்தத்—தப்பறுநல்லோர்நிலையிதுசத்தியந்தெய்வமே.

ஏதோதறிகள்ளனென்பதுபோலொன்றுதெய்வமே-யி
ந்தத்-தீதேயிலாதசிவத்தினிற்றேன்றுதேதெய்வமே.

ஐயவுருவேயகமென்றுதோன்றலாற்றெய்வமே--யிந்
தப்-பொய்யாமலகையாம்புன்பவந்தோன்றுதேதெய்
வமே. (கூ)

ஒன்றேபடும்பாடுரைப்பேன்சிறிததிற்றெய்வமே-
யிந்தப்—பொன்றுமுடம்பும்பொருளாய்முடிந்ததே
தெய்வமே. (க0)

ஓவாதஞானவமுதமுவட்டுதேதெய்வமே—யிந்த
வோவும்விடயவிடஞ்சுகமொத்ததேதெய்வமே. (கக)

ஔவியமில்லாவறிவுமறைந்ததே தெய்வமே—யிந்த
ஔவியரூபவகிலமேதோன்றுதேதெய்வமே. (க௨)

அக்கமும்பக்கமுமானதைக்காண்கிலேன்றெய்வமே
யிந்த-வக்கமும்பக்கமுமெண்ணியழிந்தேனன்றெய்வ
மே. (கங)

கண்டவுருவங்கள்காண்பதாக்காண்கிலேன்றெய்வமே — யிதைப்—பண்டுபெறித்திட்ட.பாவியரார்கொலோதெய்வமே. (கச)

காலங்கண்மூன்றுங்கடந்ததைக்காண்கிலேன்றெய்வமே—யிந்த—ஞாலத்தின்பேதங்கணன்ருகத்தோற்றுதேதெய்வமே. (கரு)

இன்னமுறும்பலவீணரைக்கிட்டினேன்றெய்வமே-யிந்த—நன்னலம்பெற்றோரைநண்ணவுநாணினேன்றெய்வமே. (கசு)

கீழோருரைத்தவுரைகளைக்கேட்கிறேன்றெய்வமே-யிந்தப்—பாழ்வாழ்விலென்னபயனெனத்தேர்கிலேன்றெய்வமே. (கஎ)

குட்டியமானகுரம்பையைநாடொறுந்தெய்வமே—மிகக்-கட்டியேகாத்திருந்தென்பயன்கண்டனன்றெய்வமே.

கூடாதென்றலிந்தக்கூட்டிலிருக்கவுந்தெய்வமே-யிந்தப்-பாடுபடுவதுபார்த்திலேயோபரதெய்வமே. (கசு)

கெம்பீரமன்றிக்கிலேசமடைந்தனன்றெய்வமே-யிந்தப்-பம்புபவக்கடலுண்டலென்றோபரதெய்வமே. (உ0)

தெய்வமேயென்னுங்கண்ணி முற்றிற்று.

---

## கிளிப்பத்து.

(வெண்செந்துறை.)

கண்படையுஞ்சாக்கிரமுங்காணுத்துரியநிலைப்
பண்படைவதென்றோபகாய்நீயஞ்சுகமே. (க)

உள்ளும்புறம்புமனமுற்றிடுஞ்சங்கற்பசகந்
தள்ளிச்சுகநிலையிற்சார்வதென்றோவஞ்சுகமே. (உ)

உன்னலொழிதலினாலுண்டாரந்தையின்பமிது
பன்னுசமநிலையிற்பாறலென்றோவஞ்சுகமே. (ங)

உள்ளநினைப்புமறப்புற்றிடினோர்தன்வடிவை
யுள்ளபடியுணரவொண்ணுமதோவஞ்சுகமே. (சு)

இத்தரையிற்றேகமெடுத்தெய்துமனச்செய்கைவிட்டுச்
சித்தசமமாம்வாழ்வுசேர்வதென்றோவஞ்சுகமே. (ரு)

இட்டமொடுகாமவுருவெய்திமனஞ்சுட்டியுறுஞ்
சுட்டறிவுநீங்குநிலைதோய்வதென்றோவஞ்சுகமே. ()

தம்மாலறிவறியாமையிரண்டுந்தள்ளிவிட்டுச்
சும்மாவிருக்குநிலைதோய்வதென்றோவஞ்சுகமே. (எ)

இத்தேகம்பற்றியிருக்குமொருதேகியின்றி
யெத்தேகமும்யானாயிருப்பதென்றோவஞ்சுகமே. (அ)

மூலப்பகுதிமுடிந்துமுடியாதுபெறுஞ்
சீலப்பரமசுகஞ்சேர்வதென்றோவஞ்சுகமே. (கூ)

சித்தமிறந்தாற்சிவமிறக்குந்தேகியுள
தத்தன்மையின்றியவனாவதென்றோவஞ்சுகமே. (க0)

அத்திபாதிப்பிரியவாதிவெளியாயிருந்தாற்
சுத்தமிலாச்சீவபாதத்தோய்தமெங்கேயஞ்சுகமே. ()

கிளிப்பத்து முற்றிற்று.

## ச ந் த வி ரு த் த ம்.

நன்னனு-நன்னனு-நான னன்னன
நானன-நானன-நானானே
சொல்லலாஞ்-சொல்லலாந்-தார-தனங்களைத்
தூற்றிவிட்-டோமென-வாயாலே. (க)

நன்னனு-நன்னனு-நன்ன-நனநன்ன
நானன-நானன-நானுனே
சொல்லலாஞ்-சொல்லலா-மந்தக்-கரணத்தைச்
சுட்டுவிட்-டோமென-வாயாலே. (உ)

சந்தவிருத்தம் முற்றிற்று.

---

சுவாநுபவத்திருவாக்கு-முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்

சர்வஞ்சின்மயம்.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

## சுவாநுபவத்திருவாக்கியங்கள்.

சர்வம்பஞ்சபூதமயம். (க)

சர்வம்மித்தை. (உ)

சர்வஞ்சின்மயம். (ங)

நாமரூபநாடாமல்வெகிர்முகமன்னியிலிருக்கிறது. (ச)

பரிபூரணமாகியதனக்கு என்னவேண்டுவது. (ரு)

எல்லாந்தோற்றமாத்திரம். (சா)

அதிட்டானமாகிய தானைப்பார்க்கும்போது நானவனெங்கே. (எ)

உபசாந்தமுந்துரியம். அறியாதவிடையமுந்துரியம்.()

பாசபந்தம் வரும்போது பாசநிவிர்த்தியுந்தோன்றவேண்டும். (௯)

சுகதுக்கமுள்ளவரையில் தாரதன்மியநீங்காது. (க0)

பிரபஞ்சமித்தையாபாவனையினாலுந் தன்மயபாவனையினாலுங் காண்பான் காட்சிநீங்கும். (கக)

எல்லாவற்றையுந் தானறியப்பட்டதாயுந்தன்னையொன்றினாலு மறியப்படாததாயு மிப்படிக்காண்கிறதே பிரத்தியட்ச ஞானம். (கஉ)

தன்னிடத்திலகங்காரம்-பிராந்தி மூலப்பிரமை.(கங)

இங்கும் அங்கும் ராகத்துவேஷ மன்னியிலிருந்தால் இரண்டுக்கு மைக்கியம். (கச)

பிரத்தியட்சமான விடயுமு மப்பிரத்தியட்சமானவிடயமுந் திருக்குவாகியஞானத்துக்குத்திரிசியம். ()

வஸ்துநிர்ணயத்தில் பிரபஞ்சந் தானல்லவென்றும் அத்துவிதத்தில் தன்னைத்தவிர வேறில்லாதபடியினாலே தானென்றும். (கசு)

சோகமடைகிறதினாலே துக்கம். மோகத்தினாலே சுகம். (கஎ)

இத்தனையுமாயாமயமலவோ வுள்ளபடிமுடியும்.(கஅ)

திரிசியந்திருக்குவையன்றியில் தோன்றாது. (ககூ)

அதிட்டானத்தைத்தவிர வாரோபத்துக்குவடிவமில்லாதபடியினாலேயெல்லாமதிட்டானமயந்தான். ()

இந்திரசாலக்காரனிடத்தில் கந்தருவபுரந்தோன்றி நில்லாம லழிந்துபோவதுபோலத் தன்னிடத்திலுண்டாகாநின்ற சங்கற்பமெவ்வளவோ அனேகமாய்வந்து மொன்று நிற்கவில்லை. (உக)

உபசாந்தமானாலுந் தன்மயமானாலுஞ் சகலத்தியாகந் தான். (உஉ)

நிவிர்த்தியாயிருக்கவேண்டும்-அல்லது, நாமரூபநாட்டம்வந்தால் அத்துவிதமாயிருக்கவேண்டும். (உங)

தன்னைச்சீவபாவனையாகக் காணுகிறதேபிறவி-தன்னைச் சிவரூபமாய்க்காணுகிறதேமோட்சம். (உச)

சகலகலைக்ஞானவல்லவாளுக்கும் நிராசைவேண்டுவதுதான். (உரு)

எல்லாஞ்சிவன்செயல்தான். (உசா)

எல்லாஞ்சிவாகாரந்தான். (உஎ)

சிற்றறிவிலேதான் உயர்வு தாழ்வான தாரதன்மியங்கள். (உஅ)

பேரறிவிலே சமசாட்சிதான். (உகூ)

உபசாந்தத்தில் சச்சிதானந்த மூன்று மநுபவமாய்க்காணவேண்டும். (ந0)

பிரபஞ்சத்தில் சொல்லப்பட்ட பேதங்களெல்லாஞ் சிற்றறிவிலேதா னென்றறியவேண்டும். (நக)

எல்லா முன்னுடைய செயலேயானால் கொடுத்ததார் வாங்கினதார். (நஉ)

ஈதனைத்துஞ் சொரூபமே. யானிங்கெத்தையிச்சிப்பேனெதையிகழ்வேனெனல்பற்றின்மை, இதில் யாருக்கும் நம்பிக்கை வரவேண்டுவதுதான். (நந)

தேகோக புத்தியினாலே யருந்த லிதனாலே பொருந்த லிதனாலே சகல ஆசையும் வந்தது. (நச

நிருவிகற்பசமாதியில் என்ன தோற்றம் வந்தாலுந் தன்னைத்திருக்காகவே காணவேண்டுவதுதான். ()

பிரபஞ்சத்தில் பஞ்சவிடயசுகத்தில் பொருந்தும் போது பிரியமாயிருக்கும். பிற்பாடு தனக்குத்தானே வெறுப்புக்காணு மிதுபோலே தன் சொரூப சுகத்திலும் பொருந்தும்போதும் பிரியம் வரும் எத்தனைநாளிருந்தாலும் பிரியம் வாங்காது. (ஙசு)

சமுத்திரத்தில் முன்வந்த அலைபோய்ப் பின்னலைவருகிறதற்குமுன்னாலே சமுத்திரமாத்திர மிருந்தது போலத் தன்னிடத்திலு முன்னாலே வந்த கடபட நினைவுபோய்ப் பின்னாலே வருகிற நினைவுக்குமுன் தானிருந்தது, இதனாலே பிரபஞ்ச மசத்துத், தான் சத்து, தன்னை யநுபவிக்கிறது மிந்தநிலை தான். (ஙஎ)

பூமியிலுண்டான வஸ்துக்களைக் கற்பிதமென்றுந் தன்மயமென்றுஞ் சொல்லலா மிதுபோல சிதாகாசத்துக்கு மேலில்லாதபடியினாலே அதிலுண்டானவைகளைக் கற்பிதமென்றுந்தன்மயமென்றுஞ்சொல்லலாம். (ஙஅ)

வகையாகக்கண்டு மயங்காமல் தொகையாகக்கண்டு சும்மாயிருக்கவேண்டும். (ஙகூ

சாதுசங்கமே சகலசன்மார்க்கத்துக்குமேது. (ச0)

உபசாந்தத்திற்கரணபானகாட்சியில்லை. (சக

* மேல்நனவுபோல இராநின்ற துரியநிலையில் சர்வ துக்கநிவர்த்தி. (சஉ)

---

* மேல் என்றது முன்னே.

உற்றவாறெதுவருமதுவருக. (சங)

எல்லாங்கதைதான். (சச)

எல்லாம்புலப்பந்தான். (சரு)

பிறர்குற்றத்தைத்தானகவெண்ணிக்கொண்டுதன்குற்றத்தை விசாரிக்கவேண்டும். (சசா)

சிற்றறிவாகிய சீவவறிவே யெல்லாவற்றிற்கு மூலம்.

மனது முதலாகிய பிரபஞ்சவியல்புகளு, மேகாடம்பரந்தான். (சஅ)

ஞானநாட்டத்திலே சிரத்தையும் பிரபஞ்சநாட்டத்திலே யசிரத்தையும். (சகூ)

தத்துவாதத்துவவிசாரம் பண்ணி அதத்துவத்தைத் தள்ளித் தத்துவத்தைத் தானகக்கண்டு சந்தேகவிபரீதமறவிருக்கவேண்டும். (ரு0)

செனனமரணமுநினைவுமாத்திரம். (ருக)

நாமரூபமாய் நாடுகிறதைத்தள்ளி சொரூபமாக நாடுகிறதே சம நிலை. (ருஉ)

குருவாக்கியத்தில் சந்தேக விபரீத மன்னியிலிருக்கிறது மெய்ப்புருடார்த்தம். (ருங)

தன் சுபாவநிலையில் நினைவுக்கு நித்தியத்துவம் இல்லாததனலே பிரபஞ்ச மித்தைதான். (ருச)

அதிட்டானக்ஞான நிலைமையுள்ளவர்களுக்கு எல்லாமாகிய அத்துவிதஞானமும் வரும். (ருரு)

பற்றின்மையாகிய துரியநிலைமை யுள்ளவர்களுக்கு போனகாரியத்திலும் வருகிறகாரியத்திலும் நினைவுதோன்றாமலிருந்தால் சாட்சாத்காரந்தான். ருசு

தான்சித்துருபனென்கின்ற புத்தி வாங்காமலிருந்தால் நானீயென்கின்ற பேதமாகிய அஞ்ஞானநீக்கம் வரும். (ருஎ)

நிகழ்காலமாகிய எதிர்காலத்தில் செய்காரியங்களில் பின்வருத்தமுஞ் சௌக்கியமு மறிந்து செய்யவேண்டும். (ருஅ)

அக்கினியில் எவ்வளவு பொறிகிளம்பினாலும் அக்கினிக்கு லயமில்லாததுபோலப்பூரணமான தன்னிடத்தில்தேகாதிமுதலாயவாழ்ந்தாயுந்தாழ்ந்தாயுமென்ன நினைவுவந்தாலுங் கற்பிதம் - தான்நித்தியம்.

எல்லாமானதாகத்தன்னையறிந்தால் ஈதலுமிரக்கமும் வரும், ராகத்துவேஷம்வாராது. (சு0)

தன்னிடத்தில் பெருமைசிறுமை பகையுறவு சுகதுக்கமாய்வருகிற சங்கற்பம், கற்பிதம். ஆரோபம். அத்தியாசந்தான். (சுக)

சரீரமுதலான பிரபஞ்சங் காலத்தில் உட்பட்டபடியினாலே அதினிடமாய் வாராநின்ற உயர்வு தாழ்வு, வருத்தங்களுக்குப்பிரமாணமில்லை. (சுஉ)

பிரபஞ்சத்தில் விவேகத்தினாலே குணத்தைப்பொருளாய்க்கொள்ளாமல் குற்றமேகாணவேண்டும். சுங

ஒன்றிலேதோன்றி யனைத்துருவமான வுணர்வுக்குப் பகையுறவென்றுரைப்பதெங்கே. (கூச)

சித்துரூபனென்கின்ற புத்திமறந்தால் உடனே விட்சேபமும் விபரீதமும்வரும். (கூரு)

சுவரிடத்திலுண்டான சித்திரம்வத்துவாகாது, இதுபோலத்தன்னிடத்திலுண்டானசர்ப்பமுதலானது வத்துவாகாது. (கூகூ)

தன்னைப்பஞ்சகிர்த்திய னுடையவனாகக்கண்டால் செனனமரணந்தனக்கில்லை. (கூஎ)

துரியநிலையிலும் எல்லாஞ் சின்மயமென்றநிலையிலும் புத்தியழுத்தம்வேண்டும். (கூஅ)

கூத்தாடியைப்போலக், கூத்துநிலையல்லப்போல, வெல்லாங்கூத்தாகக்கண்டால்,தான்,நித்தியந்தான். கூகூ

பிரமாமுதற்றம்பப்பூச்சிபரியந்தம் நிலைமையில்லாதபடியினாலே தானொருவன்மாத்திர மிருக்கிறவன் இதனாலும் அத்துவிதந்தான். (எ0)

செகத்தெல்லாந் தன்னைத்தவிர இல்லாதபடியினாலே தானே யெல்லாமானதாலும் அத்துவிதந்தான்.

சரீரமெடுத்து விசாரந்தோன்றினவரைக் குள்ளாக வெகுவிதங்களாய் உக்கிரட்டமென்று சொல்லப்பட்டபேர்க ளிருக்கவில்லை ஆனதால் தேகாதிமுதலானவைகளி லென்னதிரநிலை. (எஉ)

பிரபஞ்சங்காலத்திரயத்தினுமில்லாதபடியினுலேயும் ஒருநினைவு வரும்போது ஒருநினைவுஅழிந்துபோகிறபடியினுலேயுங் காணப்பட்டதெல்லாமழியப் பட்டுபோகிறபடியினுலேயுமித்தையென்று சொல்லுகிறதிலே சந்தேகமில்லை. (எரு)

திருநதித்துறைகளெல்லாந்தீம்புனல்வறந்தவேயோ.

அக்கினியிலுண்டாகாநின்றபொறிக்கு அனல்காரணமானதுபோலச் சகத்துக்கு ஆத்மாவேகாரணமல்லாமல் இடையிலொன்றுஞ் சொல்லத்தக்கதில்லை.

பழுதையிலுண்டான பாம்புபழுதையென்று சொல்லலா மிதுபோலப்பிரமத்திலுண்டான சகத்துப்பிரமந்தான். (எசா)

கர்மகர்த்தாவாய்க் காணும்போது கர்த்ததந்திரமென்றும் நித்தியமாய்ப் பூரணமாய்க் காணும்போது வத்துதந்திரம். (எஎ)

காரணகாரியமா யுள்ளதுக்கு பரிச்சின்னத்துவமுண்டு. நிஷ்காரணமாயிருக்கின்ற ஆத்மாவுக்கு அபரிச்சின்னத்துவமும் பூரணமு முள்ளதுதான். ()

சகலசாத்திர விசாரம்பண்ணின விசாரக் ஞானிகளுக்கு யான் எனதுமுதலான போகத்தி லாசாபாசப் பிரவிர்த்திவருகிறது பிரபஞ்சம் பிரமாணபுத்தியினுலேதான். (எகூ)

அனேக செல்வமுடையவர்களுக்கு உதாரபுத்தியுமி ரக்கமுமில்லாமல் இருக்கின்றது அவிவேகத்தினு லேதான். (அ0)

தெய்வவிதிரித்தமாகச் சீவிசுர சகத்துக்களில் கட்டு ப்பாடாய்ப் பேசாநின்ற வசனங்களெல்லாம் புத்தி மான்களுக்கு நச்சுவசனங்களாய்த் தோன்றவே ண்டும். (அக)

சுவாநுபவத் திருவாக்கியங்கள்

முற்றுப்பெற்றன.

---

திருச்சிற்றம்பலம்.

சர்வஞ்சின்மயம்.

---

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# சொரூபாநுசந்தான நாமங்கள்.

நான் அகண்ட ன்
நான் அகர்த்த ா
நான் அகாம ன்
நான் அகாரண ன்
நான் அகேய ன்
நான் அக்ரோத ன்
நான் அசங்க ன்
நான் அசம்சா ரி
நான் அசரீர ன்
நான் அசல ன்
நான் அச்சுத ன்
நான் அட்சர ன்
நான் அ ணு
நான் அத்தொய்த ன்
நான் அநந்த ன்
நான் அநா தி
நான் அநாதிமுக்த ன்
நான் அநாவிருத ன்
நான் அநுபாதேய ன்
நான் அநூதன ன்
நான் அநேகரூப ன்
நான் அபய ன்

நான் அபரிச்சின்ன ன்
நான் அபரோட்ச ன்
நான் அபேத ன்
நான் அபோக் தா
நான் அப்பிரமேய ன்
நான் அப்பிரவிர்த்த ன்
நான் அப்பிராண ன்
நான் அம்மன சு
நான் அமிர்த ன்
நான் அலோப ன்
நான் அவ்வியாகிருத ன்
நான் ஆ தி
நான் ஆத் மா
நான் ஆனந்தரூப ன்
நான் உன்னத ன்
நான் ஏகரூப ன்
நான் காரண ன்
நான் கூடஸ்த ன்
நான் சத்திய ன்
நான் சத்துரூப ன்
நான் சம் பு
நான் சர்வகாரண ன்

நான் சர்வகேத ன்
நான் சர்வசம ன்
நான் சர்வஞ்ஞ ன்
நான் சர்வதோமுக ன்
நான் சர்வாகார ன்
நான் சர்வாதார ன்
நான் சர்வாதிஷ்டான ன்
நான் சர்வாத்ம ன்
நான் சர்வாபாவ ன்
நான் சாட் சி
நான் சாந்த ன்
நான் சின்மாத்ர ன்
நான் சிவ ன்
நான் சுத்த ன்
நான் சுவப்பிரகாச ன்
நான் சுயம்பிரகாச ன்
நான் சுப ன்
நான் சூன்ய ன்
நான் சேத்திரக்ஞ ன்
நான் ஞானசொரூப ன்
நான் ஸ்தா ணு
நான் திருக் கு
நான் நானுரூப ன்
நான் நிஷ்கிரிய ன்
நான் நிஷ்பிரகிரு தி
நான் நிஷ்பிரபஞ்ச ன்
நான் நித்தியமுத்த ன்
நான் நித்தியானந்த ன்
நான் நித்திய ன்
நான் நிரஞ்சன ன்
நான் நிரவயவ ன்
நான் நிராகார ன்
நான் நிராதார ன்
நான் நிரிந்திரிய ன்
நான் நிரீச்சுர ன்
நான் நிருபத்ரவ ன்
நான் நிரூப ன்
நான் நிர்க்குண ன்
நான் நிர்ச்சம்பந்த ன்
நான் நிர்ச்சீவ ன்
நான் நிர்த்தோட ன்
நான் நிர்ப்பெத்த ன்
நான் நிர்மல ன்
நான் நிர்லேப ன்
நான் நிர்விகற்ப ன்
நான் நிர்விகா ரி
நான் நிர்விசேஷ ன்
நான் நிர்விஷய ன்
நான் நிர்விரத ன்
நான் பரமானந்த ன்
நான் பரமார்த்த ன்
நான் பரிபூரண ன்
நான் பிரத்தியக் கு
நான் பிரத்தியட்ச ன்
நான் பிர்ம ம்
நான் புத்த ன்

| | |
|---|---|
| நான் புராதன | ன் |
| நான் மகத் | து |
| நான் மகாசூன்ய | ன் |
| நான் மனோவாசா மகோச | |
| ர | ன் |
| நான் முக்த | ன் |
| நான் யதார்த்தவஸ் | து |
| நான் வஸ் | து |
| நான் வி | பு |

---

| | |
|---|---|
| நான் பூரண | ன் |
| நான் ஏக | ன் |
| நான் பரப்பிரம | ம் |
| நான் நிதான | ன் |
| நான் கேவல | ன் |
| நான் துரிய | ன் |
| நான் சம | ன் |
| நான் போத | ன் |
| நான் இலக்கிய | ன் |
| நான் சனாதன | ன் |
| நான் சிவ | ன் |
| நான் தத்துவ | ம் |
| நான் வி | ண் |
| நான் சோ | தி |
| நான் ஆன் | மா |
| நான் சூக்கும | ன் |
| நான் விமல | ன் |
| நான் அசட | ன் |

| | |
|---|---|
| நான் அனாமய | ன் |
| நான் அதூல | ன் |
| நான் நிரந்தர | ன் |
| நான் அகோசர | ன் |
| நான் அச | ன் |
| நான் அவிநா | சி |
| நான் நிஷ்கள | ன் |

---

| | |
|---|---|
| நான் பரமக | தி |
| நான் பரகாஷ் | டை |
| நான் பரதத்துவ | ம் |
| நான் பராபர | ம் |
| நான் பரமான் | மா |
| நான் புருட | ன் |
| நான் பூன்ற | ன் |
| நான் பரமசிவ | ன் |
| நான் மகாதேவ | ன் |
| நான் பரமேச | ன் |
| நான் பசுப | தி |
| நான் புராண | ன் |
| நான் ஈச | ன் |
| நான் பரம | ன் |
| நான் அ | ரி |
| நான் உருத்திர | ன் |
| நான் மகேச | ன் |
| நான் சதாசிவ | ன் |
| நான் பரமாகாச | ன் |
| நான் மகாதார | ன் |

நான் மகாவியாத ன்
நான் அத் தா
நான் ப தி
நான் விசுவாதிக ன்
நான் அங் கி
நான் பூதபால ன்
நான் ஈசுவர ன்
நான் ஈசான ன்
நான் பற் றா
நான் அற் றா
நான் மகாரி ஷி
நான் தேவ ன்
நான் ஈன்றே ன்
நான் விண் டு
நான் நாசமிலா ன்
நான் பிர பு
நான் பிராண ன்
நான் பூ மா
நான் புமா ன்
நான் அர ன்
நான் அந்தரியா மி
நான் சாசுவத ன்

நான் சங்கமிலா ன்
நான் தொந்தமிலா ன்
நான் சனாதன ன்
நான் அக்கர ம்
நான் தகராகாச ன்
நான் அ து
நான் பிரத்தியகான் மா

---

நான் அசராமரண ன்
நான் அசங்கோதாசீன ன்
நான் அவியய ன்
நான் அவியத்த ன்
நான் அபெத்த ன்
நான் அகாமாய ன்
நான் நிவிர்த்த ன்
நான் சிற்கன ன்
நான் சிற்சதாநந்த ன்
நான் சிற்றம்பர ன்
நான் சங்கற்பாதித ன்
நான் பாசாதித ன்
நான் பரம்பொரு ள்
ஆக நாமங்கள் ககூரு.

சொரூபாநுசந்தானநாமங்கள்
முற்றுப்பெற்றன.
திருச்சிற்றம்பலம்.

---

சர்வஞ்சின்மயம்.